# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (04.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351



ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# பல்கலைத் தாக்குதலை கண்டித்து யாழில் இன்று ஆர்ப்பாட்டம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸாரும் இராணுவத்தனரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். பஸ் நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதையடுத்து நகர்ப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவிலும் நடைபெறவுள்ள இந்தக் கண்டன ஆர்ப் பாட்டத்திற்கு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் அனுமதி கோரியுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் கடந்த மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தினுள் மாவீரர் தினம் தீபம் ஏற்றி அனுஷ்டிக் கப்பட்டதையடுத்து பல்கலைக்கழகத்தினுள்ளும் மாணவர்கள் விடுதிக் குள்ளும் பொலிஸாரும், இராணுவத்தினரும் (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பலர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்குள் இராணுவத்தினர் அத்துமீறி பிரவேசித்தமை, அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தை ஆண், பெண் என்ற பேதம் பாராது அனைத்து மாணவர்களினையும், இரும்புக் கம்பிகள், துப்பாக்கி அடிப்பாகங் கள் மற்றும் பொல்லுகள் ஆகியவற் றால் தாக்கி கலைத்தமையையும், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டு பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையையும், மேலும் பல மாணவர்களை கைது செய்ய எடுக்கப் (20ஆம் பக்கம் பார்க்க)



கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் இராணுவ தலையீட்டை நிறுத்தக் கோரியும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்று திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

### யாழ். பல்கலை விவகாரம்

## முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் – டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடந்த நிகழ்வு களுக்கு பின்னணியில் இருந்தவர் கள் யார் என்பதை அறிய முழுமை யான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தாம் ஜனாதிபதியிடம் கோரியி ருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சுமூகமாக இருக்கும் நிலை மையை தமிழ் தரப்பில் இருந்து சரிவரக் கையாளவில்லை என்ற ஒரு நடைமுறை அனுபவம் நமக்கு இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

எவரும் தமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமானால், தமது சொந்த வீடுகளில் அல்லது நிறுவனங்களில் விளக்குகளை ஏற்றி முன்மாதிரியாக செயற்பட்டி ருக்க வேண்டும் ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் மாணவர்களை பின்னால் இருந்து தூண்டி விடுகின்றனர்.

அப்பாவி மாணவர்களின் உணர்வுகளை அவர்கள் தவறாக பயன்படுத்துகின்றனர். கடந்த காலங்களிலும் இதுதான் நடந்தி ருக்கிறது.

ஆகவே இந்த விடயங்களை மிகவும் கவனமாக கையாள வேண்டும் என்றார்.

மேலும் ஜனநாயக நாட்டில் அனை வருக்கும் சுகந்திரம் இருக்கின்றது என்கின்ற போதிலும், அவற்றை தவறாக பயன்படுத்தக் கூடாது என்றும், அப்பாவி மாணவர்கள் சிலரது சுயலாப அரசியலுக்காக தவறாக பயன்படுத் தப்பட்டிருக்கிறார்கள் என்றும் அமைச் சர் குறிப்பிட்டார். (ந–11)

# பல்கலைக்கழக சூழலை இராணுவம் பயப்பீதியில் ஆழ்த்த முயற்சிக்கிறது

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் விடுதலை செய்யப்படும் வரை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவது சாத்தியமற்றது எனத் தெரிவித்துள்ள யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக சூழலை இராணுவம் பயப்பீதியில் ஆழ்த்த முயற்சித்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் கொல்லப்பட்டமையை விஞ்ஞானம் நிரூபிக்கவில்லை!

### பாராளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி பேச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்தமை தொடர் பில் விஞ்ஞான ரீதியில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்கா மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகள் சர்வதேசத்தின் அங்கீ காரத்தைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறிதரன் எம்.பியின் அலுவலகப் பாதுகாப்பு அதிரடியாக நீக்கம்

(கிளிநொச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனின் கிளிநொச்சி அலுவலகத் துக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாது காப்பு நேற்று மாலை 5 மணியளவில் அதிரடியாக விலக்கப்பட்டுள்ளது. இது குறித்து சிறிதரன் எம். பி கிளி நொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதன்போது மேலிடத்து உத்தரவின் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழனின் சிதைவுகளுக்கு ஒற்றுமையின்மையே காரணம்

### சுட்டிக்காட்டுகிறார் கருணாநிதி

(சென்னை)

இலங்கையில் 'ஈழத் தமிழகம்' அமையாமையால் போனதற்கு காரணம் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாததுதான் என்று திமுக தலை வர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியின் 80-வது ஆண்டு பிறந்த நாள் விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசிய தாவது:

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு 1961-ம் ஆண்டே ஐ.நா சபைக்கு அண்ணா கடிதம் எழுதினார்.

இலங்கையில் உள்ள 25 லட்சம் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்துடன் அரச பேருந்து விபத்து

## நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்து பேருந்தும் அரச போக்குவரத்து பேருந்தும் விபத்துக்குள்ளாகியதில் ஆசிரியர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளதோடு ஐவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.



யாழிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற அரச போக்குவரத்து பேருந்தும் கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வந்த தனியார் பேருந்துமே நாவற்குழி பாலத்தருகில் காலை 7.30 மணிக்கு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் யாழ். இணுவிலை சேர்ந்தவரும் விசுவமடு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிப்பவருமாகிய ஆர்.கவிதா (வயது 33) என்ற பெண்ணொருவரும், அம்பாறையைச் சேர்ந்தவரும் கோண்டாவில் டிப்போவில் கடமையாற்றுபவருமான ஏ.எம்.றிஸ்வான் (வயது 25) என்பவருமே படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்திற்கு அதிவேகமே காரணம் எனவும் அரச போக்குவரத்து பேருந்து சாரதியின் சாதுரியமான செயலால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என அதில் பயணித்த பயணிகள் சிலர் தெரிவித்தனர்.

மேலும் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு நாவற்குழி மற்றும் யாழ்.பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# கைதான பல்கலை மாணவர்களை விரைந்து விடுவிக்க வேண்டும்

## யாழ். போதனா மருத்துவர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களினையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதியன்று யாழ். பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை எனக் கூறி பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஐந்து நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் நால்வரினையும் விடுவிக்கக் கோரி அரசியல் கட்சிகள், மதத்தலைவர்கள், தொழிற்சங்கங்கள், நாடு கடந்த அமைப்புக்கள் கருத்துக்களினையும் கண்டன அறிக்கைகளினையும் வெளியிட்டிருந்தன.

இந் நிலையில் நேற்றையதினம் கூடிய யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சங்கம், கைதான மாணவர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மாணவர்களினை விடுவிக்கக் கோரி அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் உட்பட நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து யாழ்ப்பாணம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆழ்ந்த வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனால் பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் செயற்பாடுகளும் அனைத்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கையும் மனநிலையும் மோசமாக பாதிக்கப்படுவது குறித்து எமது கவலையை தெரிவிக்கின்றோம்.

எனவே சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் விரைவாக செயற்பட்டு இம் மாணவர்களை உடனடியாக விடுதலை செய்வதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி இன்று யாழ்.நகரில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் யாழ்.மருத்துவர் சங்கம் கலந்து கொள்ளுமா என மருத்துவர் சங்கத் தலைவர் வைத்தியர் எஸ்.நிமலனிடம் கேட்டபொழுது அது தொடர்பில் இறுதி முடிபு நாளை காலையே (இன்று) தெரியும் என்றார். (ந-4)

# யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சிரேஷ்ட அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ்நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக எம்.சி.எம் மொஹமட் ஜெப்ரி நேற்றையதினம் பதவியேற்றுக் கொண்டார்.

கொழும்பு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றிய இவர், யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ரணவீர முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இப்பதவியில் இருந்த செ.ஸ்ரீகுகநேசன் ஓய்வு பெற்றபின்னர் நீண்ட இடைவெளிக்குபின்னரே இவர் பொலிஸ் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-4)



# பிரதம நீதியரசருக்கு நீதிபதிகள் ஆதரவு

(கொழும்பு)

தலைமை நீதிபதிக்கு எதிராக குற்றஞ்சாட்டி பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை தொடர்பில், நீதிபதிகளின் சந்திப்பு ஒன்று தலைமை நீதிபதிக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த நீதிபதிகளின் சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றது. இதில் மஜிஸ்ட்ரேட், மாவட்ட மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சுமார் 150 பேர் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணிநேரம் இந்தக் கூட்டம் நடந்தது. தலைமை நீதிபதிக்கு எதிரான விசாரணைகள் சுயாதீனமானதாக இருக்க வேண்டும் என்றும் அந்த நீதிபதிகள் அரசாங்



கத்தை கேட்டிருக்கிறார்கள்.

அதேவேளை, தலைமை நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் கிடையாது என்று அறிவிக்கக்கோரும் வகையில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு நேற்று எடுத்துள்ளது.

நீண்ட விசாரணைக்குப் பின்னரே இந்த வழக்கை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டதாக சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ந-11)

# ஆறுமுகநாவலரின் குருபூசை நிகழ்வு

(யழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 133ஆவது குருபூசையும் அகில இலங்கை சைவநெறி தேர்வுக்கான பரிசளிப்பு விழாவும் நாளைய தினம் 5ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவினை சைவ பரிபாலன சபைத் தலைவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை தலைமை தாங்கி நிகழ்த்துவதோடு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ந-8)

# 400 குடும்பங்களுக்கு நீர்ப்பம்பி வழங்கல்

(முல்லைத்தீவு)

சிறுவர் நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மதவளசிங்கன்குளம், குமாரப்புரம், முறிப்பு, குமுழமுனை கிழக்கு, மேற்கு மந்தி, மாமுனை ஆகிய கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட 400 குடும்பங்களுக்கு 45ஆயிரம் ரூபாய் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படவுள்ளது.

இவ் இயந்திரங்களை மாமுனை கிராம சேவகர் அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு பெற்றுக்கொள்ள முடியும் என சிறுவர் நிதியத்தின் முல்லைத்தீவு மாவட்ட நிழ்ச்சித்திட்ட அதிகாரி அ.பெரட்டிப் ஜோசப் தெரிவித்துள்ளார். (ந-267)





பிள்ளையார் இன்

50% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
இன்றைய வி[illegible]

தோசை சாம்பார் சட்னியுடன் ரூ 70/- | [illegible] தோசை சாம்பார் சட்னியுடன் ரூ 90/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை சின்னம்மா

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னம்மா 03.12.2012 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லோகநாதன், சண்முகநாதன் (யாழ்.மாநகர சபை ஊழியர்) நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் (ஜேர்மனிய சட்ட ஆலோசகரும் மாண்புமிகு ஜனாதிபதியின் ஆலோசகரும் இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளரும்), இராசையா சந்திரகுமார் (ஜேர்மன்), கமலசாந்தினி (இந்திரா-லண்டன்) ஜெயமாலினி ஆகியோரின் மாமியாரும் அனங்கன், சாரங்கன், யாதவன், விதுசா, அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 05.12.2012 புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தொப்பி சாமி

இமயமலை அடிவாரத்தில் ஒரு மடம். அங்கே ஒரு சந்நியாசி இருந்தார்.

அவரிடம் ஒருவர் வந்து, ''சுவாமி... நான் ஆசையை விட்டு விலக நினைக்கிறேன்... முடியவில்லை... ஒட்டிக்கொண்டே வருகிறது...'' என்றார்.

அதைக்கேட்ட சந்நியாசி, ''இப்படி உட்கார்... உனக்கு ஒரு கதை சொல்கிறேன்'' என்றார்.

இவர் அருகில் அமர்ந்து கொண்டார். அவர் கதை கூற ஆரம்பித்தார்.

ஒரு ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் பெயர் குப்புசாமி. அவரிடம் எப்போதும் ஒரு பழைய தொப்பி இருக்கும். அதை அவர் விடவே மாட்டார்.

அதனால் அவரை எல்லோரும் ''தொப்பி சாமி'' என்று செல்லமாக அழைத்து வந்தார்கள்.

அவரிடம் அவரது நண்பர்கள் எல்லோரும் ''நீ ஒரு புதுத்தொப்பி வாங்கிக் கொள்ளக் கூடாதா?'' என்று பலமுறை சொல்லிப் பார்த்தார்கள்.

அவரோ ''புதுத்தொப்பி வாங்கினால் பணம் செலவழிந்து விடும்'' என்பதால் பழைய தொப்பியையே பாவித்து வருகிறேன் என்று கூறினார்.

அவரிடம் பணம் இருந்தது. ஆனால், செலவு செய்ய அவருக்கு மனம் வராது. மகா கஞ்சன். பழைய போத்தல்கள் வாங்கி விற்பது அவரது வழமையான தொழிலாக அமைந்தது. ஒரு சமயம் பழைய கண்ணாடி, பொருட்களை ஏலத்தில் எடுத்தபோது, அதில் ஒரு அருமையான ''சென்ட்'' போத்தல் அவரது கைக்குக் கிடைத்தது.

உடனே அதை சிறிய சிறிய போத்தல்களில் ஊற்றி அடைத்து ஜன்னல் ஓரமாக அடுக்கி வைத்துவிட்டார். அதை விற்றால் நிறைய பணம் கிடைக்குமே... அதனால் அவர் அப்படி செய்தார்.

ஒரு நாள் ''தொப்பி சாமி''யின் நண்பன் அவரை அழைத்துக் கொண்டு நீச்சல் தடாகத்திற்கு சென்றான்.

அதேசமயத்தில் அவ்வூர் நீதிபதியும் அங்கே நீராடுவதற்காக வந்திருந்தார். அவரிடம் விலையுயர்ந்த ஒரு தொப்பி இருந்தது. அவர் அதை அங்கே இருந்த ஸ்டாண்டில் தொங்க விட்டு விட்டு நீராடச் சென்றுவிட்டார்.

இதற்கிடையே குப்புசாமி குளித்து விட்டு வந்து பார்த்த போது அவரது தொப்பி அங்கே இருக்கவில்லை. அந்தப் புதுத் தொப்பியைப் பார்த்தார். ''இது நண்பனுடைய வேலை'' என்று நினைத்து அதை அவர் மாட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

நீதிபதி நீராடி விட்டு வந்து பார்த்த போது அங்கே தொப்பி இருக்கவில்லை. அதனால் அவர் பொலிஸ் நிலையத்திற்கு புகார் கொடுத்தார்.

பொலிஸார் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து வந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது குப்புசாமியின் பழைய தொப்பி அவர்களிடம் கிடைத்தது. ''அடடா! இது நமது குப்புசாமியின் தொப்பியல்லவா?'' என்று கூறி விட்டு அதை எடுத்துக் கொண்டு அவரது வீடு நோக்கிச் சென்றனர்.

அங்கு நீதிபதியின் புதுத்தொப்பி மேசையில் இருந்தது. இதனையடுத்து அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் பொலிஸார் விதித்தனர். பணத்தை செலுத்தி விட்டு, எரிச்சலுடன் வீடு திரும்பிய குப்புசாமியின் கண்ணில் பழைய தொப்பி தென்பட்டது.

''உன்னால் தானே எனக்கு ஆயிரம் ரூபா நட்டம்'' என்று கூறி அதை எடுத்து சென்று ஊர் குளத்தில் வீசி விட்டு வந்தார்.

அந்தத் தொப்பி மீன்பிடிக்கும் ஒருவன் கையில் சிக்கியது. அதை அவன் வீடு திரும்பும் வழியில் வேகமாக வீசி எறிந்தான். அது நேராக குப்பு சாமியின் வீட்டு ஜன்னலில் வைக்கப்பட்டிருந்த சென்ட் போத்தல்களின் மேல் விழுந்தது.

அதனால் அங்கு வைக்கப்பட்ட அனைத்து சென்ட் போத்தல்களும் கீழே விழுந்து உடைந்து நாசமாகின. கவலை அடைந்த குப்புசாமி உடனே தனது தோட்டத்தில் ஒரு குழியை வெட்டி அதனுள் தொப்பியை போட்டு மூடினார்.

இதை அயல் வீட்டுக்காரன் அவதானித்து விட்டு, ''குப்புசாமி ஏதோ புதையல்தான் வைத்திருக்கிறார்'' என்று நினைத்து பொலிஸில் புகார் செய்தான். மறுபடியும் பொலிஸார் குப்புசாமியின் வீட்டுக்கு வந்து மூடிய குழியைத் தோண்டினார்கள்.

அவர் புதைத்த பழைய தொப்பி மறுபடியும் வெளியே வந்தது. எல்லோரும் சிரித்தார்கள்.

அன்றைய தினம் இரவே குப்புசாமி அந்தத் தொப்பியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அதை ஒரு கல்லில் கட்டி குடிநீர் தொட்டியினுள் போட்டு விட்டு வந்து விட்டார்.

மறுநாள் குடிநீர் வழிந்தோடும் குழாய் அடைத்து விட்டது. மாநகராட்சி அலுவலர்கள் வந்து பார்த்தபோது குழாயின் அடைப்பிற்கு குப்புசாமியின் தொப்பியே காரணம் எனத் தெரிய வந்தது.

குடிநீரைப் பாழாக்கிய குற்றத்திற்காக குப்புசாமி நீதிமன்றில் 2 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக செலுத்தினார்.

அபராதத் தொகையைக் கட்டிவிட்டு அவர் வெளியில் வந்து கடைசியாக ஒரு முடிவெடுத்தார்.

தொப்பியை தீக்குச்சி கொண்டு கொளுத்தி அப்படியே எறிந்து விடுவதாக உறுதியெடுத்தார்.

இவர் இவ்வாறு யோசித்து விட்டு செய்தபோது சிறிது நேரத்தில் தீயணைப்புப்படை வந்து விட்டது. இவர் எடுத்து எறிந்த எரிந்து கொண்டிருந்த தொப்பி ஒரு வீட்டின் கூரை மீது விழுந்து பற்றிக் கொண்டது. அத்தோடு சேர்ந்து அவருடைய பணத்தாசையும் எரிந்து விட்டது என்று சந்நியாசி கதையைக் கூறி முடித்தார்.

அந்தக் குப்புசாமியிடம் இருந்தது போன்ற ஒரு பழைய தொப்பி நம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. அதை எப்படி தொலைப்பது என்று தெரியாமல் நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம்.

அதுதான் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயை, ''மெஞ்ஞானம் கிடைக்கும் போது மாயை எரிந்து போகும்'' என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# திட்டமிட்டபடி இன்று ஆசிரியர் சுகவீன விடுப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் திட்டமிட்டபடி ஆசிரியர், அதிபர்களின் சுகயீன விடுப்பு போராட்டம் நடைபெறும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

தமது கோரிக்கைகளினை வென்றெடுப்பதற்கு ஆசிரியர்கள் அனைவரையும் இன்று சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இவ் சுகயீன விடுப்பு போராட்டம் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகள் அனைத்திலும் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எம்மால் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் அரசு ஆசிரியர்களின் கோரிக்கைகளினை நிறைவேற்றத் தவறியுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட சம்பளத்திட்டத்திற்கு அமைவாக நிலுவையுடனான சம்பளத்தை உடன் வழங்க வேண்டும், அதிபர், ஆசிரியர்களின் சம்பளத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் உட்பட்ட பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இத் தொழிற்சங்க போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், அனைத்து இலங்கை ஆசிரியர் சங்கம், தேசிய கல்விச் சேவை சங்கம், பொது ஆசிரியர் உத்தியோகஸ்தர் சங்கம், சுயாதீன கல்விச் சேவையாளர் சங்கம், ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தேசிய அதிபர்கள் சங்கம், முதல் தரம் பெற்ற அதிபர் சங்கம், சுயாதீன இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை அதிபர் சேவைச் சங்கம், தரம் பெற்ற அதிபர் சேவைச் சங்கம், அனைத்திலங்கை அதிபர் சங்கம் ஆகியன இணைந்து கொள்கின்றன எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)

# தாக்குதலை கண்டிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வவுனியா மக்களுக்கு அழைப்பு

(பூந்தோட்டம்)

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு வவுனியாவில் உள்ள தேசிய உணர்வாளர்களையும் பங்குபற்றுமாறு வவுனியா மாவட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் த.தே.ம.முன்னணியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது,

கடந்த 27, 28ஆம் திகதிகளில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கண்டித்தும் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையை கண்டித்தும் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்த்தேசிய உணர்வாளர்களையும் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்களையும் பங்கு பற்றுமாறு கோருகின்றோம்.

எனவே, எமது மக்களின் சுதந்திரமான கல்வி நடவடிக்கைகளுக்கு பலம்சேர்க்கும் இப்பயணத்தில் தாங்களும் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அழைக்கின்றோம் என தெரிவித்துள்ளனர். (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 110 | 130 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 |
| தக்காளி | 100 | 50 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 30 |
| கோவா | 80 | 60 | 100 | 70-80 |
| கரட் | 100 | 70 | 140 | 100 |
| பூசணி | 60 | 40 | 60 | 50-60 |
| புடோல் | 40 | -- | 100 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 70-80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-130 | 160 | 180 |
| பெரிய வெங்காயம் | 110 | 70 | 120 | 130 |
| பாகற்காய் | 160 | 70 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 50 |
| பயற்றங்காய் | 160 | 80 | 100 | 100-120 |
| லீக்ஸ் | 90 | 70 | 120 | 90-100 |
| பீற்றூட் | 100 | 60 | 140 | 40 |
| கறிமிளகாய் | 160 | 80 | 160 | -- |
| முருங்கைக்காய் | 350 | -- | -- | -- |
| போஞ்சி | 180 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | -- | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 35 | 10-12 |
| [illegible] | 160 | 120 | 150 | 120 |
| [illegible] | 40 | 30-35 | 30-35 | 25-45 |

# இராசி பலன்

04.12.2012

(கார்த்திகை 19, செவ்வாய்கிழமை)

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

சஷ்டி பின்னிரவு 4.57 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 3.08 மணிவரை

இராகுகாலம் 3.16-4.46 மணிவரை

சுபநேரம் 10.46-12.16 மணிவரை

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்வீர்கள்.

**மிதுனம்** மாமன், மைத்துநர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் ஏற்படலாம், அம்பிகை வழிபாட்டில் ஆர்வமுண்டு.

**கடகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, சயன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, இறைபக்தியில் நாட்டம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணமொன்று உருவாகலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்த வேண்டி வரலாம்.

**கன்னி** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலை உயர்வடையும், மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுற்றத்தார் வருகையுண்டு, தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு.

**தனுசு** தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகளில் விழிப்புணர்ச்சி தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**மகரம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமான நாள்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பகைவர்கள் விலகுவர், கௌரவமான நாள்.

**மீனம்** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், பாராட்டும் புகழும் கூடும், வியாபார விருத்தியுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி- இடைக்குறிச்சியில் கட்டாக்காலிகள் அதிகரிப்பு


வரணி பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப் படுவதனால் நெற்பயிர் செய்கையாளர்களும் பொதுமக்களும் பல்வேறு வகையான அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகஇடைக்குறிச்சி விவசாய சம்மேளன பிரிவில் உள்ள வரணி நியாப் பொது நோக்கு மண்டபம் அமைந்துள்ள பிரதேசத்தில் தங்கியிருக்கும் கால்நடைகள் வயல் வெளிகளில் உள்ள நெற்பயிர்களையும் பொதுமக்களின் காணிகளில் உள்ள பயன்தரு மரங்களையும் அழித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி பிரதேச சபையினர் கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு ஆங்காங்கே அறிவித்தல்களை காட்சிப்படுத்தியுள்ள போதும் கால்நடைகளின் உரிமையாளர்கள் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்காத நிலைமை காணப்படுகிறது.

எனவே, இது விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு தமக்கு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)




நன்றி: ஐலன்ட்

# யாழில் 41 நலன்புரி நிலையங்கள் இதுவரை மூடப்படவில்லை

## மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் தகவல்

(யாழ்ப்பாணம்)

**போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்களைக் கடந்துள்ளபோதும் யாழ்.குடாநாட்டில் 41 நலன்புரி நிலையங்களில் மக்கள் தங்கி வாழ்ந்து வருகின்றனர் என யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அந்தத் தகவல்களின் அடிப்படையில், உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குள் 11 நலன்புரி நிலையங்கள் தற்போதும் இயங்கி வருகின்றன. அந்த நலன்புரி நிலையங்களில் 333 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 232 பேர் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இதுதவிர கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 5 நலன்புரி நிலையங்கள் உள்ளன. இதில் 259 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 28 பேர் தங்கி வாழ்ந்து வருகின்றனர். மேலும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 7 நலன்புரி நிலையங்களில் 258 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 3 பேரும் சண்டிலிப்பாயில் 5 நலன்புரி நிலையம் உள்ளதாகவும் இதில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேர் வாழ்ந்து வருவதோடு நல்லூரில் ஒரு நலன்புரி நிலையத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும் கரவெட்டியில் 2 நலன்புரி நிலையத்தில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேரும் பருத்தித்துறையில் 8 நலன்புரி நிலையங்களில் 309 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 21 பேரும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களின் காணிகள் மற்றும் வீடுகள் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுள்ளதனால் அந்த மக்கள் சொந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர் எனவும் அந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குள் இயங்கி வந்த இரண்டு நலன்புரி நிலையங்களும் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அந்த நலன்புரி நிலையத்தில் இருந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இல்ங்கையில் குறிப்பாக வடபகுதியிலுள்ள நலன்புரி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில் யாழ். குடாநாட்டில் 41 நலன்புரி நிலையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்த க்கது.

மேலும் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் இந்திய வீட்டுத்திட்டம் போன்ற உதவித்திட்டங்களில் மீள்குடியேற்ற கிராமங்கள் சில தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் இடம்பெயர்ந்த மக்கள் அந்தரித்துக் கொண்டு இருக்க இராணுவப் படைகள் குடாநாட்டில் புதிய படைமுகாம்களை அமைத்து வருகின்றமையும் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகின்றமையும் மக்கள் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் இராணுவப் படை முகாம்கள் அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-6)

## தொலைக்காட்சி பெட்டி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை 6 ஆம் இலக்க ஆண்கள் விடுதிக்கு தொலைக் காட்சிப் பெட்டியும் சி.டி. பிளேயரும் உசன் மிருசுவிலைச் சேர்ந்த குலராஜசிங்கம் சிவனேஸ்வரனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

குறித்த நபரின் தாயாரான திருமதி குலராஜசிங்கம் சிவக்கொழுந்துவின் நினைவாகவே இவ் அன்பளிப்பு பொருட்கள் வைத்திய பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டன.

மேற்படி விடுதியில் சிகிச்சை பெற்று வெளியேறியோரால் ஏற்கனவே மீன் தொட்டி, சுவர்க்கடிகாரங்கள் போன்ற பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## சுயதொழில் கடனை பெற்றுக்கொள்ளலாம்

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட சுயதொழில் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள் சான்றிதழ்களைப் பெற்று வங்கிகள் ஊடாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என நிஸ்கோ முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடனைப் பெற்றுக் கொள்வதற்கான கருத்தரங்கில் பங்குபற்றிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 51 இளைஞர்களும் சேவை மன்ற காரியாலயத்தில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு வங்கிகள் ஊடாக சுயதொழில் கடனைப்பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-3-37)

# கண்டுவில்குள வாய்க்காலை புனரமைப்பதில் தாமதம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கண்டுவில் குளத்து நீர் வழிந்தோடும் வெள்ள வாய்க் காலை புனரமைப்பதற்கு சிலர் தடையாக் இருப்பதால் குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கள் அதிகமாக மழை பொழியும் காலத்தில் வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றன.

மழை காலத்தில் வழிந்தோடும் வெள்ளம் இக்குளத்தை வந்தடைகிறது. இக்குளத்தில் மேலதிகமாக சேரும் மழை நீர் அருகில் உள்ள ஆலய வீதி ஊடாக கற்குழி குளத்திற்கு சென்று அங்கிருந்து தொடர் வாய்க்கால்கள் மூலம் வேம்பிராய் மாத்தளான் வெளிக்கு செல்கிறது.

இந்த வாய்க்கால் பல வருடங்களாக புனரமைக்கப்படாமையால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் உள்ளது. இதனால் வெள்ளம் அருகில் உள்ள குடியிருப்புக்களுக்குள் புகுந்து மாதக்கணக்கில் தேங்கி நிற்பதால் அம் மக்கள் பல்வேறு நோய்கள் உட்பட பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குளத்தை அண்டிய பகுதியில் வாழும் மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை வேல்ட்விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வாய்க்காலை புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டார்.

வாய்க்கால் புனரமைக்க சென்றபோது அப்பகுதியில் உள்ள ஒருநபர் வேலை செய்ய விடாது தடுத்து திருப்பி அனுப்பியதால் நகர சபை உத்தியோகத்தர்கள் குறித்த நபருடன் கலந்துரையாடி வாய்க்காலை தற்காலிகமாக அமைக்க சம்மதம் பெற்றனர்.

கடந்த வாரம் திரும்பவும் வாய்க்காலை புனரமைக்க சென்றபோது பணியாளர்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டனர். எனவே, உரிய தரப்பினர் உரிய தீர்வை எடுத்து உதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

## பொது நூலகங்களின் தே.வாசிப்பு மாத நிகழ்வு

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி மீசாலை, நுணாவில் பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் சாவகச்சேரி. நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராஜா, மீன்பிடி நீர்வள அபிவிருத்தி யாழ்.அலுவலக உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, ஹற்றன் நஷனல் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் என்.கருணைராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் லயன் வீ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் வ.நடராஜா, சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வி.சிவசரணநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் **மீள்பார்வை** என்ற தலைப்பில் சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் சு.புத்திசிகாமணியும் **வாசிப்பின் மகத்துவம்** என்ற தலைப்பில் சாவகச்சேரி நகராட்சி மன்ற உப தவிசாளர் கு.சாதசிவமூர்த்தியும் உரையாற்றவுள்ளனர். அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் கௌரவிப்பு நிகழ்வும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் நூலக வாசகர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் செயற்பாடுகளை மாதந்தோறும் கண்டறிய வேலைத்திட்டம்

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பத்தாயிரம் பாடசாலைகளின் செயற்பாடுகளை மாதந்தோறும் கண்டறிவதற்கான புதிய வேலைத்திட்டமொன்றை ஜனவரி முதல் ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளின் சீரான நிர்வாகம், சிறந்த கல்விப் போதனை போன்றவையே இத்திட்டத்தின் முக்கிய இலக்கு என அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜனரத்ன தெரிவித்தார்.

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி போன்றவற்றுக்குப் பெருந்தொகை நிதி வருடாந்தம் செலவாகிறது. இச்செலவீனங்களால் இலவசக் கல்வி அர்த்தமயமாக வேண்டும்.

எனவே கல்வி நடவடிக்கைகள் கண்டறியப்படவேண்டும். மாதந்தோறும் அமைச்சு மீளாய்வுகளை செய்வது முக்கியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்தியுடன் 41 இலட்சம் மாணவர்களின்கல்விநிலையம்உயரவேண்டும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் சித்தி பெறாதோரின் எண்ணிக்கை குறைய வேண்டும் எனவும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் யோசனைகள், கருத்துக்களைப் பெற்று வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்ட முறையாக மேற்கொள்ளப்படுகிறதா? என்பதை அமைச்சு மட்டத்தில் மேற்பார்வை செய்வது இதுவே முதல் முறையாகும் என்றும் பாடசாலைகளின் மாதாந்த முன்னேற்றம் தொடர்பாக அமைச்சுக்கு அறிக்கை மூலம் அறிவிக்க வேண்டும்எனவும் தெரிவித்தார்.

அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து குறைபாடுகள், பிரச்சினைகள் இருந்தால் அவற்றுக்கான தீர்வுகளை வழங்க அமைச்சு கடப்பாடுடன் செயற்படுமென்றும் அவர் தொடர்ந்து தெரிவித்தார். (அ-9)

## இரத்ததான நிகழ்வு

(கரவெட்டி)

பருத்தித்துறை கடற்பரப்பில் 1999 ஆம் ஆண்டு நீரியல்வள ஆராய்ச்சிக்காக சென்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி க.பொ.த உயர்தர மாணவர்கள் நால்வர் கடலில் மூழ்கி மரணித்தனர். இத்தினத்தை முன்னிட்டு கல்லூரி சமூகத்தினால் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இரத்ததான நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே, உயிர் காக்கும் உன்னத பணியான இரத்ததான நிகழ்விற்கு இரத்தம் வழங்கும் கொடையாளர்கள் அந்நிகழ்வில் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-3-24)

## சுகாதார அமைச்சுக்கு வாரத்தில் பத்து பாலியல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு பாலியல் துன்புறுத்தல் சம்பவம் பற்றி மேலும் மூன்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் வாராந்தம் சராசரி 10 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பற்றி முறைப்பாடுகள் அமைச்சுக்கு கிடைப்பதாகவும் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் மீதே குறிப்பாக சிற்றூழியர் தரத்தினருக்கே இந்த அவலம் நேரிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உயர் பதவி வகிக்கும் பெண்களும் இலக்காக உள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இணைக்கபட்டுள்ள தொழிற்சங்கத்தின் தலைவர் ஒருவர் மேற்படி மூன்று சம்பவங்களில் ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ளார்.

பாலியல் சலுகை வழங்கினால் இடமாற்றத்தை இரத்து செய்து தருவதாக ஒரு பெண் ஊழியரிடம் இத்தலைவர் உறுதியளித்துள்ளதாக அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. ஏனைய இரண்டு பெண் ஊழியர்களையும் துன்புறுத்திய இரு சந்தேகநபர்களும் வைத்திய விநியோக பிரிவில் கடமையாற்றும் இரண்டு சிற்றூழியர்களாவர்.

மேற்படி இரண்டு பெண்களையும் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்வதற்கும் மூன்று முறைப்பாடுகளையும் விசேட புலனாய்வு பிரிவினரிடம் கையளிப்பதற்கும் அமைச்சு முடிவு செய்துள்ளது. சந்தேகநபர்கள் மீதான் புகார் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை பெண்கள் மற்றும் யுவதிகள் மீதான இத்தகைய பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஏனைய துஷ்பிரயோகம் சம்பந்தமாக அமைச்சிலும் அமைச்சின் நிறுவனங்களிலும் நடைபெறும் சம்பவங்களை முறையிடுவதற்கு சுகாதார அமைச்சு தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

0112686393 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை அத்தகைய முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. (அ-9)

## கட்டார் வாகன விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு

(கொழும்பு)

கட்டார் இரையான் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூதூர் பெரியபாலம் பகுதியைச் சேர்ந்த அப்துல் சலாம் அக்ரம் (வயது22 )என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டார் ரையான் விற்பனை பிரதிநிதியாக தொழில் புரிந்து வந்த இவர் வீதியை நேற்று முன்தினம் கடக்க முற்பட்ட போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாஸா கட்டாரில் அடக்கம் செய்யப்பட்டதாக மூதூரிலுள்ள அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். விடுமுறையில் வீடு வந்த இவர் கடந்த வாரம் மீண்டும் கட்டாருக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## திகதி நீடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரால் நடத்தப்படும்எயிட்ஸ் தின வினா விடை போட்டி விடைப்பத்திரங்களை ஒப்படைக்கும் திகதி 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இவ்விடைப்பத்திரங்களை நேற்று திங்கட்கிழமைக்கு முன்சமர்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-3-29)

## பரிசளிப்பு விழாவும் நாவலர் குரு பூசையும்

(யாழ்ப்பாணம்)

யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 133 ஆவது குருபூசை நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.சிவபாத சுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பா. பாலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)


YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ். மாவட்டத்தில் எப்பிரதேசமாயினும் காணிகளை விற்கவோ வாங்கவோ எம்முடன் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


## விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

எமது உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி கடந்த நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளிவந்த வர்த்தகமானியின் பிரகாரம் 30.11.2012 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை விண்ணப்பிக்கதவறிய மாணவர்கள் தமது விண்ணப்பங்களை அத்திகதிக்கு முன்னர் அனுப்புமாறு உயர் தொழில்நுட்பவியல் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5' 5"<br>கி.பா: 48, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை :A/L, UK Student visa<br>தொ. இல : B -414 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 3<br>உயரம்: 5' 2"<br>கி.பா: 54.5, 8இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>வெளிவாரி QAG<br>தொ. இல : G - 590 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5' 11"<br>கி.பா : 36.5<br>தொழில்/ தகைமை : A/L தனியார் நிறுவன முகாமையாளர் நகைக்கடை பங்காளர்<br>தொ. இல : B - 416 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 44.25, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்<br>தொ. இல : G - 003 |
| பிறப்பு: 1981 இந்து செங்குந்தர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 49<br>தொழில்/ தகைமை:A/L<br>விற்பனை பிரதிநிதி (தனியார்)<br>தொ. இல : B - 418 | பிறப்பு: 1964 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 73, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L, விஞ்ஞான பயிற்சி ஆசிரியை<br>எ.பா.: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ. இல : G - 028 |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>உயரம்: 5' 7"<br>கி.பா:20,4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: பட்டதாரி HNDA<br>கணக்காளர் அரச திணைக்களம்<br>தொ. இல : B - 420 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 63 , 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: MBBS (Dr)<br>தொ. இல : G -033 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.வில் 11 எயிட்ஸ் நோயாளர்களில் இருவரே உயிருடன் வாழ்கின்றனர்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 11 பேர் எயிஸ்ட் நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ள துடன் அவர்களில் இரண்டுபேரே உயிருடன் உள்ளதாக வவுனியா பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கே. சந்திரகுமார் தெரிவித்தார்.

சர்வதேச எயிட்ஸ் தினம் வவுனியா முச்சக்கரவண்டிகள் உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் வவுனியா பொலிஸாருடன் இணைந்து வவுனியா பாலுறவு நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தாரர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் எயிட்ஸ் நோய் தொடர்பில் பாரிய விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை ஆண்டு தோறும் எயிட்ஸ் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஆண்டுதோறும் எயிட்ஸ் விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கும் பல்வேறு தரப்பாலும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலமாக வவுனியா மாவட்டத்தில் முழுமையாக எயிட்ஸ் நோயினை கட்டுப்படுத்த முடியுமென்ற நம்பிக்கையில் எமது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

(அ-9-266)

# சிகரெட் பைக்கற்றுக்களில் எச்சரிக்கைப் படங்கள்

## மருத்துவ சங்கம் ஆதரவு

சிகரெட் பைக்கற்றுக்களில் புகைத்தலின் ஆபத்தை உணர்த்தும் படங்களுடன் கூடிய எச்சரிக்கையை வெளியிடும் சுகாதார அமைச்சின் நடவடிக்கைக்கு அரச மருத்துவ சங்கம் ஆதரவு அளித்துள்ளது.

நாள்தோறும் புதிதாக புகைப்பிடிப்போர் உருவாகி வருகின்றனர்.தினசரி புகையிலை தொடர்பான நோய்களால் மக்கள் பலியானதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வருடாந்தம் புகையிலை காரணமாக 12 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் வரை மரணிக்கின்றனர்.புகையிலை தொடர்பான நோய்கள் காரணமாகவும் அநேகம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவை தடுக்கப்பட கூடியதாகும். புகையிலை பாவனையைக் குறைக்க பல நாடுகள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

புகை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள புகை உற்பத்திகளில் புகைத்தலின் ஆபத்தை விளக்கி படங்களுடன் கூடிய எச்சரிக்கை முறை முக்கிய நடவடிக்கையாகும்.

புகைத்தல் சார்ந்த விளம்பரங்களை நிறுத்தல், இதனை ஊக்குவிக்காமை, புகையிலை வரிகளை அதிகரித்தல், பொது இடங்களில் புகைத்தலை தடுத்தல் போன்றவை ஏனையநடவடிக்கையளாகும்எனசங்கஅறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் வெற்றி பெறாதது ஏன்?

## முன்னாள் அதிகாரி ஆய்வு

(கொழும்பு)

ஈழம் என்னும் கருத்தியல் தொடர்ந்து நிலைக்கும் வரை இழக்கப்படும் ஒவ்வொரு போராளியினதும் தலைமையினதும் வெற்றிடத்தை அவர்கள் பொருத்தமான முறையில் பதிலீடு செய்வார்கள் என்னும் லெப்.ஜெனரல் கல்கத்தின் மேற்கோளினை இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த போது இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றிய பிரிகேடியர் ரவி பால்சோகர் தான் எழுதிய Ours Not to Reason Why என்கின்ற நூலில் மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்திய- இலங்கை உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டு 25 ஆண்டுகளின் பின்னர் தற்போது இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டதன் நோக்கம் என்ன என்பது தொடர்பில் புனே என்கின்ற இடத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பால்சோகர் பல்வேறு வினாக்களை எழுப்பியுள்ளார்.

இவ்வாறு கூறுவதன் மூலம் எமது மூத்த அதிகாரிகளுக்கு கோபத்தையும் எரிச்சலையும் உண்டுபண்ணுகிறேனா? அவ்வாறானால் என்னை மன்னித்து விடுங்கள் எனவும் பால்சோகர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் அரணாக விளங்கிய முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையின் 7ஆவது காலாற் படையை வழிநடத்திய தனது அனுபவம் தொடர்பாக பால்சோகர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதே .காலாற்படைக்கு 1962 இல் தங்ல என்கின்ற இடத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் பிரிகேடியர் ஜோன் டல்வி கட்டளை வழங்கியிருந்தார். ஜோன் டல்வி எழுதிய (Himalayan Blunder) என்கின்ற நூலைப் போலவே பால்சோகரின் நூலும் உண்மை என்ன என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் அந்த நூலில் எழுப்பப்பட்ட கேள்விகளை ஒத்தவாறான கேள்விகளை எழுப்புகின்றது. பால்சோகரின் நூலான Ours Not to Reason Why வாசகர்களுக்கு தெளிவான விளக்கத்தை வழங்குகின்றது.


தமிழீழ விடுதலைப் புலிகளை 10 நாட்களில் அழிக்க முடியும் என இந்திய இராணுவத்தினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் பிரதம தளபதியாக விளங்கிய ஜெனரல் கே.சுந்தர்ஜி குறிப்பிட்ட கருத்திற்கு பால்சோகர் பின்வருமாறு பதிலளித்துள்ளார்.

எதிரீடு செய்தல் என்பதன் கருத்து என்ன? புலிகளின் திறன் முற்றிலும் அழிக்கப்பட்டு அவர்கள் அடியோடு ஒழிக்கப்பட்டனரா? அவ்வாறு அழிக்கப்பட்டிருந்தால் பங்களாதேசில் நடந்தது போன்று புலிகளின் முழு உறுப்பினர்களும் சரணடைந்திருக்க வேண்டும். அப்படி எதுவும் நடந்ததா? நாங்கள் விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கு எமது முழுப் பலத்தையும் கூட்டு வலுவையும் பயன்படுத்தியிருக்க வேண்டும். இந்திய அமைதிகாக்கும் படை என்ன நோக் கத்திற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டது என்பது தொடர்பில் தெளிவான வரையறைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இரு வாரங்களில் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்படுவர் என்ற குருட்டு நம்பிக்கையில் நாம் இலங்கைக்குச் சென்றோம். ஆனால் இரு வாரங்கள், இரு மாதங்கள் கடந்து இரு ஆண்டுகள் ஆனபோதிலும் புலிகளை நாம் தோற்கடிக்கவில்லை என பால்சோகர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யுத்த நடவடிக்கையில் வீரத்துடன் போரிட்டு தமது உயிர்களை நீத்தவர்களின் பெயர்களை தனது நூலில் நினைவுகூர நூலாசிரியர் மறந்து விடவில்லை. புலிகள் வைத்திருந்த குண்டு துளைக்காத அங்கிகள், ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் போன்ற அடிப்படை இராணுவ உபகரணங்களைக் கூட வழங்காது இந்திய இராணுவத்தினரை புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட வைத்ததென்பது கீழ் மட்டத்திலிருந்த இராணுவத்தினரின் பிழையல்ல. இது உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் தவறே எனவும் பால்சோகர் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

50 ஆயிரம் படை ஆட்களுடன் நாம் இலங்கைக்குச் சென்றிருக்கலாமா? என்கிறார் பால்சோகர். காலாற்படைகளுக்கு பொறுப்பாக இருந்த இவரது பிரிகேட்டில் ஒரு கம்பனி மட்டுமே மேலதிக ஆயுதங்களைக் கொண்டிருந்ததானது இந்திய உயர் இராணுவ பீடத்தின் திட்டமிடல் குறைபாட்டை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது என பால்சோகர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)




அகவொளி குடும்பவள நிலையமும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய சிறுவர், முதியோர் விழா அண்மையில் அகவொளி குடும்ப வள நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது...

# தரம் 5 மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கோப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா , சிறப்பு விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சக்தி எம்முடன் இருக்கும் வரை சர்வதேசம் எம்மை அசைக்க முடியாது



(கொழும்பு)

**மக்கள் எம்மோடு இருக்கும் வரை சர்வதேச மட்டத்திலான எத்தகைய சூழ்ச்சிகள் மூலம் அரசாங்கத்தை ஒருபோதும் அசைக்கமுடியாதென ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் கண்டி குண்டசாலையில் நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான இயந்திர பராமரிப்பு கட்டடத்தை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில்,

தன்னையும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு வெளிநாடுகளில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சில அரசசார்பற்ற நிறுவனங்களும் புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புக்களும் தேசிய ரீதியில் சில சக்திகளும் டொலருக்கு சோரம் போய் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

நாம் மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் எம்மை அர்ப்பணித்துசெயற்படுகின்றோம். அதை சகல மக்களும் நன்கு அறிவர். மக்கள் எங்களோடு இருக்கும் வரை எவரும் எம்மை வீழ்த்த முடியாது. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் மக்கள் ஒருபோதும் அதை அனுமதிக்கமாட்டார்கள். நாம் நாட்டை அபிவிருத்தியில் கட்டி யெழு ப்பி வருகின்றோம். நாட்டின் அபிவிருத்திக்கு நெடுஞ்சாலைகளே உந்துசக்தியாக இருக்கின்றன. அதனா லேயே நாட்டில் முக்கிய நெடுஞ்சாலைகளை நாம் புனரமைத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு நான்கு நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கண்டிக்கான அதிவேக பாதையின் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளோம். பாதைகளின் அபிவிருத்தி மூலமே நாட்டில் அபிவிருத்திப் புரட்சியை எம்மால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்பதே எனது நம்பிக்கை என்றார். (அ-9)

## கோட்டையில் போதைப்பொருள் விற்பனை

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் கோட்டையில் ஹெரோயின் போதைப்பொருளை கொள்வனவு செய்யக்கூடிய மூன்று இடங்களை கோட்டையின் மாநகர முதல்வர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய கோட்டை மாநகர முதல்வர் ஜனக ரணவக்க, குறித்த மூன்று இடங்களிலும் ஹெரோயின் போதைப் பொருளை தாரளமாக பெற்றுக்கொள்ளக் கொள்ளமுடியும் என்று குறிப்பிட்டார்.

குறித்த ஹெரொயின் விற்பனையில் பிரதேசத்தின் முக்கிய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்களின் பெயர் பட்டியலை தாம் பொலிஸ் தலைமையகத்தில் கையளிக்கவுள்ளதாக கோட்டை மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார். (அ-9)

## அரசியல் தீர்வுக்கு முன்மொழிவை சமர்ப்பிக்க ரெலோ திட்டம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான ரெலோ என்று அழைக்கப்படும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனியான முன்மொழிவொன்றை சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளது.

ரெலோவின் பொதுச்சபை கூட்டம் நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றது. இதன்போதே தனியான முன்மொழிவொன்றை சமர்ப்பிப்பது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தனியான முன்மொழிவை தயாரிப்பதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இந்த குழுவில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பொதுசெயலாளர் ஹென்றி மகேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், என்.ஸ்ரீகாந்தா மற்றும் ஜே.கருணாகரன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இந்த முன்மொழிவை தயாரிப்பதற்கு கட்சியிலுள்ள புத்திஜிவிகளின் ஆலோசனைகளும் பெறப்படும் என அவர் குறிப்பிட்டார். ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்காக இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும் என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ரெலோவின் மாநாட்டை எதிர்வரும் ஜனவரி 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்துவது எனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## மாணிக்கபுரம் வீதியின் காப்பெற்றிடும் பணி நிறுத்தம்

### பயணத்தில் மக்கள் சிரமம்

(றெட்பானா)

மாணிக்கபுரம், வள்ளுவர்புரம், தேராவில் ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளையும் இணைக்கும் பிரதான வீதியை கொங்கிறீற் வீதீகளாக மாற்றும்பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது இவ் வீதியின் புனரமைப்பு வேலைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஒப்பந்தகாரர்களின் அசமந்தப்போக்கும் ஒழுங்கீனமான வேலைகள் காரணமாகவும் இவ்வீதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதனால் மூன்று கிராமங்களை சேர்ந்த மக்கள் நாளாந்த போக்குவரத்துக்காக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அவசர போக்குவரத்து சேவைகளை மேற்கொள்ளும் முச்சக்கரவண்டி சாரதிகள்கூட சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உடன் விரைந்து நடவடிக்கை எடுத்து புனரமைப்பை துரிதப்படுத்தி போக்குவரத்திற்கு உதவுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

## கொலைச்சம்பவத்தில் கைதாகிய 8 பொலிஸ் அதிகாரிகள் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் ஜே.வி.பி. தலைவர் ரோகன விஜயவீரவின் சகோதரர் ஆனந்த விஜயவீர உட்பட நால்வரைக் கொலை செய்த வழக்கின் சந்தேகநபர்களான எட்டு பொலிஸ் அதிகாரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி உயர் நீதிமன்றில் நீதிபதி மணிலால் வைத்தியதிலக முன் இடம்பெற்ற விசாரணைகளின் போது பிரதான சாட்சியான நிகால் ரத்ன டி சில்வா சமுகமளித்திருக்கவில்லை. மேற்படி சாட்சியைத் தேடிப் பிடிக்க முடியாதிருப்பதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிரதான சாட்சி இல்லாமல் வழக்கை மேலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது எனவும் சந்தேக நபர்கள் குற்றமற்றவர்கள் எனவும் தெரிவித்து விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கண்டி பொலிஸ் நிலைய பரிசோதகர் அசோக பண்டார ஹேரத், பொலிஸ்பரிசோதகர் சீலரத்ன, உபபொலிஸ் பரிசோதகர் தயானந்த விஜயகோன், சார்ஜண்ட் பாரூக் யூசுப், பரிசோதகர் லிண்டன் அமுனுகம, உபபரிசோதகர்களான அத்துலருபேறு, சேமரத்ன மற்றும் பாலிதகே ஆகியோர் மீதேகுற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)



நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு புதிய நூல்களின் கண்காட்சி, மாணவர்களுக்கான பொதுஅறிவு, விநாடிவினாப்போட்டி, கதை கூறல் ஆகிய நிகழ்வுகள் அண்மையில் கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வினை பொறுப்பதிகாரி தி.தவராசா, நூலகர் திருமதி பூ.பாலபாஸ்கரன் ஆகியோர் நடத்தியிருந்தனர்.

## கடும் போக்கான கைதிகளுக்கு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை

### மட்டக்களப்பில் சிறை வைக்கப்படுவர்

கடும்போக்கான சிறைக்கைதிகளை பலத்த பாதுகாப்புடன் தங்கவைப்பதற்கு சிறந்த இடமொன்றை மட்டக்களப்பு மாந்தை தீவில் ஏற்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் கலந்துரையாடி வருகின்றனர் என சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தினை அடுத்தே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. செப்பல் வார்ட் மற்றும் எல் மண்டபம் ஆகிய கூடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த கடும்போக்கான சிறைக்கைதிகளே வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தினை தலைமை தாங்கி நடத்தியுள்ளனர் என்பது ஆதாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. செப்பல் வார்டில் பலத்த மேற்பார்வையின் கீழே கடும் போக்கான சிறைக்கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வைத்தியசாலையொன்று மாந்தை தீவில் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த வைத்தியசாலையினை அம்பாந்தோட்டையிலுள்ள சிறியளவான சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு பேச்சு நடத்தி வருகின்றது. (அ-9)

## கிடங்கில் நிரம்புகிறது நீர்; நுளம்பு பெருக்கெடுக்கும்!

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி நகரின் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தின் பின்புறத்தில் பாரிய கிடங்கு காணப்படுகிறது.

மேற்குறித்த கிடங்கினுள் குப்பைகள் காணப்படுவதுடன் மழை நீர் நிரம்பி கழிவுகளாக துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் டெங்கு நுளம்பு பெருகுவது டன் அதன் நோய்த்தாக்கமும் ஏற்படும் அபாய நிலை உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.


எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூவரில் ஒருவர்

## அம்புலிமாமா கதைகள்




கஜபுரமன்னன் கஜசிம்மனின் பொக்கிஷதாரர் தனசேகரர். அவருக்கு மிகவும் வயதாகி விட்டது. இனி தான் அதிக நாட்கள் வாழ முடியாது என அறிந்து கொண்ட அவர் மன்னிடம் அரசே இப்போதே எனக்கு பதிலாக ஒரு நல்ல பொக்கிஷதாரரை நியமித்து விடுங்கள். ஏனெனில் நான் அதிக நாட்கள் வரை உயிருடன் இருக்கமாட்டேன் என்றார்.

மன்னனும் நீங்கள் நேர்மையாய் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு முறையாக நடப்பவர். எதையும் அவசரப்பட்டு கூறமாட்டீர்கள். சொல்வதை நிறைவேற்றுவீர்கள். இப்படிப்பட்ட உங்களது பணியால் நான் பயனடைந்தது அளவிடமுடியாதது. இப்படிப்பட்ட உங்களுக்கு சமமாக வேறு யாரைக் காணமுடியும். எனினும் தங்கள் மகன் அநேகமாகத் தங்களைப் போலத்தானே இருக்கிறான். அவனையே இப்பதவியில் அமர்த்திவிடலாமே என்றான்.

அதற்குத் தனசேகரர் என் மகன் நேர்மை தவறாதவனே. ஆனால் பொக்கிஷத்தை நிர்வகிக்கும் அளவுக்கு திறமை பெற்றவனல்ல. ஆனால் எனக்குத் தெரிந்த ஒருவனை இப்பதவிக்குச் சிபாரிசு செய்கின்றேன். அவன் என் தூரத்து உறவினன். புதூர் என்ற ஊரில் வசிப்பவன். பெயர் சுந்தரம். அவனை வரவழைக்கிறேன் என்றான். மன்னனும் அவனை நியமிக்கலாம் எனக்கூறினான்.

ஆனால் மறுநாளே தனசேகரர் மாரடைப்பால் இறந்து விட்டார். இதனால் பொக்கிஷதாரரை உடனே நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. மன்னன் தன் மூத்த அமைச்சரிடம் அது பற்றிப் பேசவே அவரும் நாம் மாறுவேடத்தில் புதூருக்குப்போய் சுந்தரரைப் பற்றி விபரமாகத் தெரிந்து கொண்ட பின்பே அவனை இப்பதவிக்கு நியமிக்கவேண்டும் என்றான். மன்னனும் அந்த அறிவுரையை ஏற்றார். மறுநாளே மன்னனும் அமைச்சரும் மாறுவேடத்தில் புதூருக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

புதூரில் அவர்கள் சுந்தரரைப் பற்றி விசாரித்தபோது அந்தப் பெயரில் மூன்று பேர்கள் இருப்பதும் மூவரும் தனசேகரரின் உறவினர் என்றும் தெரியவந்தது. மூவரும் நல்லவர்கள். என்றும் நேர்மை தவறாதவர்கள் என்றும் அவர்கள்



அந்த ஊரில் யாரிடம் கேட்டாலும் பதில் பெற்றார்கள்.

அப்போது அமைச்சர் மன்ன னிடம் நாம் வீடுகளில் வசதியாக வாழ்பவர்களிடம் தா்ன் விசாரித்து அதனால் அடிப்படையில் அவசர ப்பட்டு முடிவெடுக்கவேண்டாம். தாழ்நிலையில் உள்ள யாராவது ஒருவனைப்பார்த்துக் கேட்போம். அதோ ஒருவன் தாடியும் மீசையுமாய் பரதேசி போல் இருக்கிறான். அவனிடம் விசாரிக்கலாம் என்றான். மன்னனும் சரி எனவே இருவரும் அந்த மனிதனை அணுகினார்கள்.

அவர்கள் அவனிடம் உன்பெயர் என்னப்பா? நீ இந்த ஊர்க்காரனா? என்ன வேலை செய்கிறாய் என்று கேட்டார்கள். அவனும் என் பெயர் கண்ணன். இந்த ஊர்க்காரன் தான் வேலை என்று எதுவும் இல்லை. யார் என்ன சொன்னாலும் அதைச் செய்து அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொண்டு காலம் கழிக்கிறேன் என்றான். அப்போது மன்னன் நீ நாங்கள் கூறுகிறபடி செய்தால் உனக்குப் பத்து வராகன்கள் கொடுக்கிறோம் என்றான். அவனும் பத்து வராகன்களா? வேலையைச் சொல்லுங்கள். இப்போதே செய்து முடிக்கிறேன் என்றான்.

அப்போது அமைச்சர் இந்தஊரில் மூன்று பேர்கள் சுந்தரம் என்று இருக்கிறார்கள். நீ அவர்களைக் கண்டு இன்னும் இரண்டு நாட்களில் அவர்களுக்கு அரசாங்க வேலை கிடைக்கப்போவதாக யோசியம் சொல்லி அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை எங்களுக்குச் சொல்லவேண்டும். நாங்களும் உன் கூட வருகிறோம். நீ அவர்களிடம் யோசியம் பலித்த பின்பு அவர்கள் எதைக்கொடுத்தாலும் வாங்கிக் கொள்வதாகக்கூறு என்றார்.

கண்ணன் முதலில் அவர்களை நெட்டைச் சுந்தரத்திடம் அழைத்துப் போனான். அந்தச்சுந்தரமும் என்ன கண்ணா? என்ன விடயம்? என்று கேட்டான். அப்போது அமைச்சர் இவன் மிக நன்றாக யோசியம் சொல்கிறான். இவனைப் பற்றித் தெரியுமா? என்று கேட்க நெட்டைச் சுந்தரமும் ஓ தெரியும். யோசியம் சொல்வானே என்றான்.

அப்போது கண்ணனும் நெட்டைச் சுந்தரத்திடம் உங்களுக்கு இன்னும் இரண்டுநாட்களில் அரசாங்க வேலை கிடைக்கப்போகிறது என்றான். அதுகேட்டு நெட்டைச் சுந்தரம் நீ சொல்கிறபடி அரசாங்க வேலை கிடைத்தால் உனக்கு பத்தாயிரம் வராகன்கள் கொடுக்கிறேன் என்றான். அதைக் கேட்டு கண்ணன் சிரித்தவாறே விடை பெற்றுக்கொண்டு மன்னனை யும் அமைச்சரையும் அழைத்துக் கொண்டு அடுத்து குட்டைச் சுந்தரத்தின் வீட்டையடைந்தான்.

அங்கு கண்ணன் குட்டைச் சுந்தரத்திற்கு இன்னமும் இரண்டு நாட்களில் அரசாங்கவேலை கிடைக்கும் என்று யோசியம் கூறினான். குட்டைச் சுந்தரமும் நீ சொல்கிறபடி நடந்தால் உனக்கு ஒரு மாடி வீடு கட்டித் தருகிறேன் என்றான். அதைக்கேட்ட கண்ணன் சிரித்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு தன்னோடு வந்த இருவரையும் அழைத்துக்கொண்டு தருமவான் சுந்தரத்தின் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு கண்ணன் அந்தச்சுந்தரத்தைக் கண்டு அவனுக்கு இன்னும் இரண்டு நாட்களில் அரசாங்க வேலை கிடைக்கப்போவதாக யோசியம் கூறினான். அதைக் கேட்ட சுந்தரம் நீ யோசியம் கூறியபடி நடந்தால் உனக்கு என் முதல் மாதச் சம்பளத்தைப் பரிசாகக் கொடுக்கிறேன் என்றான். அதைக்கேட்ட கண்ணன் ஆ! என்று கூவியவாறே தன் நினைவையிழந்து விழுந்து விட்டான்.

உடனே சுந்தரம் ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்து அவனது முகத்தில் தெளித்து மயக்கத்தைப் போக்கி உட்கார வைத்தான். மன்னன் அவனிடம் ஏனப்பா மயங்கி விழுந்துவிட்டாய்? என்று கேட்டான். கண்ணனும் நெட்டைச் சுந்தரமும் குட்டைச்சுந்தரமும் நல்லவர்களே. ஆனால் அவர்கள் தாம் சொன்னதை நிறைவேற்றமாட்டார்கள். ஆனால் இந்தத் தருமவான் சுந்தரம் அப்படிப்பட்டவர் அல்ல. எதையும் நன்கு யோசித்துச் சொல்லி அதன்படி நடப்பவர். அரசாங்கவேலையில் சம்பளம் பெரிய தொகையாகவே இருக்கும். இவர் முதல் மாதச் சம்பளத்தையே எனக்குக் கொடுப்பதாகக்கூறியதும் அவ்வளவு பெரிய தொகை கிடைக்கிறதா என்ற மகிழ்ச்சியில் நினைவிழந்து விழுந்து விட்டேன் என்றான். அப்போது அமைச்சர் மன்னனிடம் தனசேகரர் குறிப்பிட்ட சுந்தரம் இவர்தான் என்றார்.

அப்போது மன்னன் சுந்தரத்திடம் தாம் இருவரும் யார் என்பதைக்கூறி இனி நீங்கள் என் பொக்கிஷ அதிகாரி. தனசேகரர் கூறியபடி நேர்மை, திறமை, எதையும் யோசித்துச் சொல்லிச் செயற்படும் தன்மை உங்களிடம் உள்ளது. இப்போதே எங்களோடு



தலைநகருக்கு வந்து அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

சுந்தரமும் அவர்களை பணிவுடன் வணங்கி அவர்களோடு தலைநகருக்குச் சென்று பொக்கிஷதாரர் பதவியை ஏற்றுக் கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE MAYA CALENDAR

மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு

# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!


-ராஜ்சிவா- 03



மாயன்களின் றொக்கெட் சித்திரம்

விண்வெளிக்குச் செல்லும் ராக்கெட் படத்தில் தெரிகிறதா? அதன் அளவு எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் என்பதை அதன் அருகே இருக்கும மனிதர்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இந்தக் காலத்தில் இருக்கும் அனைத்து விதமான விமானங்களும் அடங்கிய ஓவியம் இது.



மாயன்களின் விமானங்களின் ஓவியம்

மாயா இனத்தவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர், சொன்னதின் பேரில் 2012 இல் உலகம் அழியும் என்று நாம் ஏன் நம்பவேண்டும்? இந்தப்பயம் அறிவியலாளர்களிடையே கூட இரண்டாகப்பிரிந்து விவாதிக்கும் அளவுக்குப் பெரிதாகியதன் காரணம் என்ன? அந்தளவுக்கு இந்த மாயாக்கள் முக்கியமானவர்களா? என்ற கேள்விகளுக்கு பதில் தேடும்போது உலகத்தில் நடைபெற்ற பல மர்மங்களையும் நாம் பார்த்தேயாகவேண்டும்.

அத்துடன் இங்கே குறிப்பிடப்படும் சம்பவங்களும் படங்களும் அறிவியலுக்கு ஒத்துவராத மூட நம்பிக்கைகளை சொல்வதாக நீங்கள் கருதலாம் ஆனால், உலகத்தில் இப்படியெல் லாம் இருக்கின்றன என்பதே தெரியாமல் எம்மில் பலர் இருக்கிறோம். அதனால், அவற்றை முதலில் பார்த்து விடுவோம். நவீன விஞ்ஞானம் இன்றிலிருந்து கிட்டத்தட்ட 400 ஆண்டுகளில்இருந்துதான் ஆரம்பித்தது. அது கடந்த நூறுவருடங்களில் மிகவும் அசுரத்தனமான வேகத்தில் பிரயாணித்து இன்று எல்லையில்லாமல் விரிவடைந்து காணப்படுகிறது. பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டது இந்தக் காலப்பகுதியில்தான்.

தோமஸ்அல்வா எடிசன் எனும் விஞ்ஞானி 1879 ஆம் ஆண்டுகளில் மின்விளக்கை கண்டுபிடித்தார் என்று எமக்குத் தெரியும். அதைத்தான் உண்மையென்றும் நாம் இன்றுவரை நம்பிவருகிறோம். எகிப்திலுள்ள டென்டெரா எனும் இடத்தில் உள்ள 4000 ஆண்டுகள் பழமையான கோவில் சுவர்களில் உள்ள சித்திரங்கள் பலரையும் வாயடைக்கச் செய்திருக்கிறது. அந்த மின்விளக்குகளின் கீழ்ப்பகுதியில் உள்ள குமிழும் அதில் பொருத்தப்பட்டிருக்கும் நீண்ட



மாயன்களின் மின்குமிழாக இருக்கலாம்

இழையும், மின்விளக்கினுள்ளே இருக்கும் எரியிழையும் யாருக்கும் வேறு எதையும் ஞாபகப்படுத்த முடியாது.


இந்தப்படத்திலுள்ளவையும் மின் விளக்குகள் தானா இல்லையா என்ற முடிவுக்கு நீங்கள் வருவதற்கு முன்னர் அவை வெளிச்சம் தந்தால் இப்படிக் காட்சியளிக்குமா? கீழ்க்காணும் படத்தையும் அவதானியுங்கள்.

இவற்றையெல்லாம் நம்மால் நம்பமுடியாது இவையெல்லாம் வேறு ஏதோ சித்திரங்கள என்று நாம் கருதலாம்.



வெளிச்சம் போட்டுப்பார்கையில்

ஆனால், பக்தாத் நகரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு பொருள், இவையெல்லாம் மின்சாரம் சம்பந்தமானவையே என நம்பவைக்கின்றன. கி.மு.250 காலங்களில் இந்தப்



எகிப்தியர்களின் மின்கலம்

பொருள் வழக்கில் இருந்திருக்கிறது. அதைத் தற்சமயம் கண்டெடுத்த ஆராய்ச்சியாளர்களே, அதைக்கண்டு அசந்தனர். அந்தப்பொருள் வேறெதுவுமல்ல மின்கலங்கள்(பற்றரிகள்).

எனவே மிகப்பழையகாலத்திலேயே எகிப்தியர்கள் மின்கலங்களை உபயோகப்படுத்தியிருக்கலாம் என நாம் நம்ப இடமுண்டு.

மாயன் இனத்தின் சரித்திரத்தின் மைல்கல்

மாயன் இனத்தவர் வாழ்ந்த பகுதியில் ஆராய்ச்சிக்கென வந்த ஒருவரின் கண்ணில் தற்செயலாகத் தட்டுப்பட்ட



பொருள் ஒன்று அதைக் கண்டெடுத்தவரை மலைக்கவைத்தது. அந்தப் பொருள் ஒரு மண்டையோடு. இது ஒரு சாதாரண மண்டையோடு அல்ல. அது ஒரு கிறிஸ்ரெல்(பளிங்கு) மண்டையோடு. கிரிஸ்ரெல் என்று சொல்லப்படும் மிகவும் பலம்வாய்ந்த கண்ணாடி போன்ற ஒரு மூலப் பொருளினால், உருவாக்கப்பட்ட மண்டையோடு அது.

கிரிஸ்ரெல் என்பது கண்ணா டியிலும் வலிமையான குவார்ட்ஸ் போன்ற பலம் வாய்ந்த மூலப்பொருட்களினாலும் அதிகம் உருவாக்கப்படுகிறது. இந்த வகைக் கிரிஸ்ரெலை வெட்டுவது என்பது இன்றைய காலத்திலேயே மிகக்கடினமானது. வைரம் போன்றவற்றால் தான் அதை வெட்டமுடியும். அல்லது நவீன லேசர் தொழில்நுட்பத்தினால் வெட்டலாம்.

மாயா இனத்தவர் வாழ்ந்த இடங்களை ஆராய்வதற்காக லுபாண்டுன் எனும் இடத்தில் அமைந்த மாயன் கோவிலில் கிடைத்த இக்கிரிஸ் ரெல் மண்டையோடு 5000 வருடங்களுக்கும் மேல் மாயன் இனத்தவர் வாழ்ந்த காலங்களுக்கு முந்தையது. இம் மண்டையோடு மிக அழுத்தமாக அழகாக வட்ட வடிவமாக தேய்க்கப்பட்டு பளபளப்பாக செதுக்கப்பட்டிருக்கிறது. அன்றைய காலத்தில் ஒரு மாயன் ஒரு நாள் முழுவதும் மண்டையோட்டை செதுக்க ஆரம்பித்திருந்தால் அவனுக்கு ஆயிரம் அண்டுகளுக்கு மேல் இந்த மண்டையோட்டை செதுக்கி முடிக்க எடுத்திருக்கும். அவ்வளவு துல்லியமாக செதுக்கப்பட்டிருக்கிறது. இலேசர்தொழில்நுட்பம் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது என்றால் நம்பமுடியுமா? இது எப்படி? இந்த மண்டையோடு பல செய்திகளை எமக்குத் தெரிவிக்கிறது.


மிச்செல் ஹெட்ஜஸ் என்பவர் 1940 களில் மிகவும் பிரபலமான ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளராக இருந்தவர். அவரது வளர்ப்பு மகளின் பெயர் அன்னா ஹெட்ஜஸ். 1924 ஆம் ஆண்டு மிச்செல், மாய இனத்தவர் வாழ்ந்த இடங்களை ஆராய்வதற் காக லுபாண் டுன் எனும் இடத்தில் என்னும் இடத்தில் அமைந்த மாயன் கோவிலுக்குச் சென்றார். அங்கே ஒரு பிரமிட்டின் அருகே அன்னாவின் காலடியில் இந்த கிறிஸ்ரெல் மண்டையோடு தட்டுப்பட்டது. அப்போது அன்னாவுக்கு வயது 17 அன்னாவினால் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுதான் இது.

மாயன்களின் சரித்திரங்களை ஆராய்ந்தபோது, இதுபோன்ற-மொத்தம் 13 மண்டையோடுகள் இருக்கின்றன என அறிந்து கொண்டார்கள். இவற்றில் 8 கிரிஸ்ரெல் மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.

இந்த மண்டை யோடுகளில் ஒன்றை அடிப்படையாக வைத்துத் தான் 2008 ஆம் ஆண்டு இன்டியானா ஜோன்ஸ் அனட் த கிங்டொம் ஒஃப் த கிறிஸ்ரெல் ஸ்கல் என்னும் சினிமாப்படம் வெளியானது. இந்தப்படதில் வரும் பாத்திரம் என்பது உண்மையாகவே இருந்த பாத்திரம். அதாவது ஆராய்ச்சியாளர் மிச்செல்ஹெட்ஜஸ் என்பவர்தான் அந்தக் கதாபாத்திரம்.




மாயன் சொன்னவற்றை தவறு என்று வெகு சுலபமாகத்தட்டிக்கழித்துச் செல்ல அறிவியலாளர்களுக்கே கொஞ்சம் தயக்கம் இருந்தது. மாயன்களின் சுவடுகளும் அவர்கள் விட்டுச்சென்ற சுவடிகளும் தான் இந்தத் தயக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தக் காரணமாக அமைந்துவிட்டன. மாயன்கள் சொன்னவற்றை அறிவியலுடன் பொருத்திப் பார்க்கும்போது ஏற்பட்ட வியப்புத்தான் இந்தப் பயத்தை இன்னும் அதிகமாக்கியிருந்தது.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# சுகாதாரமும் உடற்கல்வியும் – II

**✸ முதலாம் வினாவுக்கு விடையளித்தல் கட்டாயமானதாகும்.**

**✸ அதற்கு மேலதிகமாக பகுதி I பகுதி II ஆகியவற்றிலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

01. திரு.விஜயபாகு உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் முகாமையாளராக சேவையாற்றுகின்றார். இவரின் கீழ் 300 இற்கு அண்மித்த தொழிலாளர்கள் சேவை செய்கின்றனர். பகல், இரவு ஆகிய இரு நேரங்களிலும் சேவை செய்யும் இத் தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஓய்வும் தூக்கமுமே கிடைப்பதுடன் அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வின்போது கரம், செஸ், டாம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வொலிபோல், பட்மின்டன், டெனிஸ் போன்ற விளையாட்டு மைதானங்களும் ஹோட்டல் தொகுதியினுள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக ஹோட்டல் மூலம் தினந்தோறும் வழங்கப்படும் உணவுத் தட்டில் எண்ணெய் அதிகமுள்ள சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட இறைச்சி, மீன் உடன் சமைக்கப்பட்ட புரதத்தின் அளவு கூடிய உணவுகளை அவர்கள் தொடர்ந்தும் உட்கொள்கிறார்கள். விஜயபாகுவும் அந்தக் ஹோட்டலின் உணவுகளையே உட்கொண்டு அங்கேயே தங்கி தனது சேவையை மேற்கொள்கின்றார்.

ஹோட்டலின் சுற்றுப்புறம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு சுற்றுச் சூழலானது எல்லோரினதும் மனதைக் கவரக்கூடிய மகிழ்ச்சியூட்டும் இடமாக வடிவமைக்கப் பட்டுள்ளதுடன் ஹோட்டலிருந்து வெளியேறும் அசுத்த நீரை நீர் சுத்திகரிக்கும் இயந் திரமொன்றை உபயோகித்து சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுவதுடன் இந்நீரானது நில அலங்காரங்களுக்கும் தோட்டத்தை வளப்படுத்தவும் உபயோகிக்கப்படும்.

ஹோட்டலிலிருந்து அகற்றப்படும் கழிவுகளை பகுதிகளாக வேறு பிரித்து கொம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டு தோட்டத்தின் தேவைக்கு பயன்படுத்தப்படும்.

நேர்மையான முகாமையாளரொருவராக கடமையாற்றும் திரு.விஜயபாகு அவர்களுக்கு அதிகநேரம் தமக்குரிய காரியாலயத்தில் உட்கார்ந்திருக்க வேண்டியிருப்பதால் அதற்காக சொகுசான நாற்காலியொன்றையும் பயன்படுத்தப்பழக்கப்பட்டுள்ளார். இடைக்கிடையே ஏற்படும் இடுப்புவலியினால் அவதியுறும் விஜயபாகு வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்வதுடன் அவருடைய கடமையை நேர்த்தியாகச் செய்கின்றார்.

(i) திரு. விஜயபாகு தனது ஹோட்டல் தொகுதியில் சுகாதார மேம்பாட்டு நிலைமையாக அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை நான்கினைக் குறிப்பிடுக.

($\frac{1}{2}$ x 4 = 2 புள்ளிகள்)

(ii) தனிநபர் ஒருவரின் பூரண சுகாதாரத்திற்கு சுறுசுறுப்பும், பொருத்தமான போஷாக்கும் தேவைப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக பந்தியில் குறிப்பிடப்பட்ட தொழிலாளர்களுக்கு அத்தியாவசியமான தேவைகள் இரண்டு தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படலாம் என கருதக்கூடிய பரவாத நோய்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iv) திரு. விஜயபாகுவின் உணவுத்தட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமற்றது என நீர் கருதக்கூடிய உணவு வகைகள் இரண்டு தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(v) ஹோட்டலில் வழங்கப்படும் உணவு வேளையொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உணவுக் கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(vi) திரு. விஜயபாகுவிற்கு ஏற்பட்டுள்ள இடுப்பு வலிக்கு காரணமெனக் கருதக் கூடிய காரணிகள் இரண்டு தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(vii) இந்த ஹோட்டலில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்காக பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுக்களில் மிகப் பொருத்தமானது என நீர் கருதும் விளையாட்டுக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(viii) நீர் மேலே குறிப்பிட்ட விளையாட்டுக்கள் பொருத்தமானது எனக் கருதுவதற்கான காரணங்கள் இரண்டினை சுருக்கமாகக் கூறுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(ix) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உள விருத்திக்கு பொருத்தமான விளையாட்டுக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(x) தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டு வசதிகளில் இடைத் தொடர்பை விருத்தி செய்யும் நோக்கில் ஒழுங்கு செய்ய முடியுமான நிரற்போட்டி வகைகள் இரண்டினைத் தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(2 x 10 = 20புள்ளிகள்)

## பகுதி I

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

02. அகீஷா தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவியாவாள். இவள் பாடசாலை விடுமுறையை கழிப்பதற்கு அவளுடைய பாட்டியின் வீட்டுக்கு மகிழ்ச்சியுடன் சென்றாள். அங்கு பாட்டியின் மூலம் சுவையாக சமைத்துக் கொடுக்கப்பட்ட உணவு வகைகளுள் மிகவும் பொருத்தமான உணவாக பலாக்காய்ச் சுண்டல் அமையப் பெற்றது. தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளுக்கும் உடன் உணவுகளுக்கும் பழக்கப்பட்ட அகீஷா பாட்டியின் சமையலை விருப்பத்துடன் உண்டு மகிழ்ந்தாள்.

(i) பந்தியில் குறிப்பிடப்படாத சம்பிரதாய முறையில் (பழைய முறையில்) பதனிடத்தக்க (பாதுகாக்கத்தக்க)உணவு வகைகள் இரண்டினைக் குறிப்பிடுவதுடன் அவ்வாறு உணவு பதனிடத்தக்க முறைகள் இரண்டு தருக.

($\frac{1}{2}$ x 4 = 2 புள்ளிகள்)

(ii) உணவு பதனிடத்தக்க நவீன முறைகள் இரண்டு தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iii) கலப்புணவு என்றால் என்ன என்பதை குறிப்பிட்டு உதாரணம் ஒன்று தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iv) உணவு நஞ்சாகும் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(v) கலப்பட உணவு என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக

(1 x 2 = 2 புள்ளிகள்)

03. இன்று உலகம் முகம் கொடுக்கின்ற பாரிய சவாலாக பாலியல் நோய்களைக் குறிப்பிடலாம். சில பாலியல் நோய்களை குணப்படுத்த முடியாததுடன் அவற்றினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பல்வேறு வேலைத்திட்டங்கள் மூலம் யௌவனப் பருவத்தினரை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் வைத்தியர்களால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டன.

(i) பாலியல் நோய் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக

(1 x 2 = 2 புள்ளிகள்)

(ii) பாலியல் நோய் பரவும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iii) வைரசு மூலம் பரவும் குணப்படுத்த முடியாதெனக் கருதக்கூடிய மரணம் வரை மருந்து பாவனை செய்ய வேண்டிய பாலியல் நோயைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iv) மேலே நீர் குறிப்பிட்ட நோய் அல்லது நோய்க்கிருமி பிறருக்குப் பரவும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(v) பாலியல் நோயினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் இரண்டு தருக.

(1 x 2 = 2 புள்ளிகள்)

04. பின்வரும் சவால்களை நீங்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் முறையைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(i) க.பொ.த(சா / த) பரீட்சை முடிவடைந்த தினத்தன்று உம்முடன் காதல் தொடர்பொன்றை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதாக உமது வகுப்பு மாணவன் ஒருவன் குறிப்பிடும் அச் சந்தர்ப்பத்தில் உமது நண்பியும் இதனை தொடருமாறு உம்மை வற்புறுத்துகின்றாள்.

(ii) மாகாண மட்டத்தில் சிறந்த வீரர் எனும் விருதை தொடர்ச்சியாக இரு வருடங்கள் பெற்றுக் கொண்ட உமது விருப்பத்துக்குரிய நண்பன் இவ்வருடம் அவ்விருதை இழந்ததன் காரணமாக விளையாட்டிலிருந்து ஓய்வு பெற தீர்மானித்தல்.


(iii) பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை வேளையில் ஆசிரியரோ அல்லது பாதுகாவலரோ இல்லாது பாடசாலை மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட வருமாறு உமது நண்பி உம்மை அழைத்தல்.

(iv) இல்ல விளையாட்டு போட்டியில் இல்லக் குடிசை அமைப்பதற்காக இரவு வேளை வருகை தந்த நண்பனொருவன் கொண்டு வந்திருந்த மதுபானத்தை அருந்துவதற்கு உமக்கும் அழைப்பு விடுக்கப்படல்.

(v) பரீட்சை முடிவடைந்து மறுநாள் உம்முடைய நண்பன் ஒருவன் அவனின் வீட்டில் எவரும் இல்லையெனக் கூறி அன்றைய தினம் இணையத்தளத்திலுள்ள நிகழ்ச்சிகளை பார்வையிட வருமாறு உமக்கு அழைப்பு விடுத்தல்.

## பகுதி II

05.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்பட்ட ஓட்டப்பாதையொன்றைக் கொண்டுள்ள விளையாட்டு மைதானமொன்றின் மாதிரி படமொன்று மேலே உரு காட்டுகின்றது. A, B, C, D எனும் விளையாட்டு வீரர்கள் இம்மைதானத்தினுள் தமது போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர்.

A - 100m, 200m, 4x100m, நீளம் பாய்தல்

B - உயரம் பாய்தல், பரிதி வட்டம் எறிதல், குண்டு போடுதல்

C - 5000m, 10000m, 4x400m

D - ஈட்டி எறிதல், 4x400m, தடைதாண்டல் போட்டிகள்

(i) A வீரன் - நீளம்பாய்தல்

B வீரன் - உயரம் பாய்தல், பரிதி வட்டம் எறிதல்

D வீரன் - ஈட்டி எறிதல்

ஆகிய போட்டி நிகழ்ச்சிகளுக்காக பங்கேற்பதற்கு செல்ல வேண்டிய மைதானங்களை குறிப்பிடுக.

(½ x 4 = 2 புள்ளிகள்)

(ii) A வீரன் தனது சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த முடிவை எவ்வாறு பெறலாம் என்பதைக் குறிப்பிட்டு அவ் வீரனின் பாதங்களில் அதிகமாக அடங்கும் தசை நார் வகைளைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iii) C வீரன் தனது ஓட்ட நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள இடத்தை குறிப்பிட்டு அவ்வீரனின் பாதங்களில் அதிகமாக அடங்கும் தசை நார் வகையைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iv) அஞ்சற் குறுங்கோல் மாற்று முறையின்போது கலப்பு முறையிலான மாற்றத்துக்கு மிகப் பொருத்தமான வீரன் யார் என்பதைத் தருக.

(1 புள்ளி)

(v) மைதான நிகழ்ச்சிகளில் மர்த்திரம் பங்கு கொள்ளும் வீரனைக் குறிப்பிட்டு பரிதி வட்டம் எறியும்போது பின்பற்றப்படும் விதிமுறைகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

06. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகிறது. இயற்கையை மதிப்பதற்கும் அதனை அனுசரித்து நடந்து கொள்வதற்கும் நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இயற்கையின் அருட்கொடையான சூரியன், சந்திரன், பகல், இரவு, மழை, வெயில், காற்று, நீர் போன்றவைகள் எமது வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு இன்றியமையாதவைகளாகும். வெளிக்களச் செயற்பாட்டுக் கல்வியின் மூலம் இது தொடர்பான தெளிவொன்றை பெற முடியும்.

(i) வெளிக்களச் செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) வெளிக்களச் செயற்பாடொன்றை ஒழுங்கமைக்கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iii) வனப்பயணத்தின் போது ஏற்படக்கூடிய சவால்கள் மூன்றினைக் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

(iv) காலநிலை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதன் மூலம் எங்களுக்கு ஏற்படக்கூடிய சவால்களை அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே சுனாமி எச்சரிக்கை ஏற்படுவதற்கு முன்னர் எங்களுக்கு அறிந்து கொள்ள முடியுமான அடையாளங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

07. A, B, C என்னும் மூன்று பகுதிகளிலிருந்து ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடை எழுதுக.

A எகமுது, நில்மினி ஆகிய அணிகள் இரண்டுக்கிடையில் நடைபெற்ற வொலிபோல் போட்டியின் வெற்றி நில்மினி அணிக்கு கிடைத்தது.

(i) போட்டியில் வெற்றி பெறுவதற்காக நில்மினி அணி வீரர்கள் பயன்படுத்திய திறன்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) நில்மினி அணியின் பின் வரிசை வீரரொருவர் முன்வரிசையில் வலைக்கருகாமைக்கு வந்து அறைந்த பந்து எகமுது அணியின் எல்லைக்குள் நிலம் பட்டிருப்பின் நடுவரின் தீர்ப்பை விளக்குக.

(3 புள்ளிகள்)

(iii) எகமுது அணியின் லிபரோ வீரன் மூலம் நில்மினி அணியிலிருந்து வந்த பந்தை பாதத்தால் மேலெடுத்து நில்மினி அணியை நோக்கி அனுப்புகை நடுவரின் தீர்ப்பு என்ன என்பதைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iv) எகமுது அணியின் பணித்தலை மேற்கொண்ட 4 ஆம் இலக்க வீரர் நடுவரின் சமிக்ஞைக்கு அமைய பணிததலை மேற்கொண்டார். அப்பணித்தலானது நில்மினி அணியின் எல்லைக்குள் நிலம் பட்டதுடன் நடுவர் விசிலை ஊதி போட்டியை நிறுத்திய பின் பணித்தல் கோடு தொடர்புடைய சமிக்ஞையை காட்டி நில்மினி அணிக்கு 1 புள்ளியுடன் பணித்தலையும் வழங்கினார். நடுவர் இவ்வாறான தீர்ப்பை வழங்கியமைக்கான காரணத்தை தெளிவுபடுத்துக.

(2 புள்ளிகள்)

B சிவப்பு, நீல அணிகளுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியின் வெற்றி சிவப்பு அணிக்குக் கிடைத்தது.

(i) சிவப்பு நீல அணிகள் போட்டியின்போது பயன்படுத்திய திறன்கள் நான்கை எழுதுக.

(2 புள்ளிகள்)

(ii) சிவப்பு அணியின் வெற்றிக்கு எப்போதும் நீல அணியின் வீராங்கனையை பின்னே நிறுத்தி சிவப்பு அணியின் வீராங்கனைக்கு பந்தை எய்தும் சந்தர்ப்பத்தை வழங்கியமையே காரணம் என்பது பார்வையாளர்களின் கருத்தாகும். இங்கு நடுவர்கள் ஏன் இவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை தெளிவுபடுத்துக.

(2 புள்ளிகள்)

(iii) சிவப்பு அணி போட்டி ஆரம்பிக்கும்போதும் மீள ஆரம்பிக்கும்போதும் மைதானத்தினுள் வீரர்கள் நிலைகொண்ட விதம் வெற்றி பெறுவதற்கு காரணமாகியது. அவ்விதத்தை வரைந்து காட்டுக.

(iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் நடுவரின் தீர்ப்பைக் குறிப்பிடுக.

அ) சிவப்பு அணியின் மையத்தோன் (C) பந்துடன் பேற்று வலையத்துக்குள் சென்றாள்.

ஆ) நீல அணியின் வீராங்கனையால் எய்தப்பட்ட பந்து சிவப்பு அணியின் GK வீராங்கனையின் கையில் பட்டு மைதானத்திற்கு வெளியே செல்லல்

(2 புள்ளிகள்)

C மைதானத்தினுள் எந்தவொரு இடத்திலும் விளையாடக் கூடிய திறமையான காற்பந்தாட்ட வீரரான சிராஜ் இம்முறை இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(i) காற்பந்தாட்டத்தின்போது சிராஜ் பிரயோகிக்கக் கூடிய திறன்கள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

(ii) சர்வதேச காற்பந்தாட்டப் போட்டியொன்றிற்கு குறைந்ததும் கூடியதுமான நடுவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iii) பந்துக்கு உதைக்கும்போது சிராஜ் பிரயோகிக்கத்தக்க உதைக்கும் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iv) எதிரணிக்கு தண்டனை உதைக்கான சந்தர்ப்பம் கிடைப்பதற்கு சிராஜினால் ஏற்படவல்ல தவறுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

# சிநேகபூர்வ துடுப்பாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. கிரிக்கெட் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியினர் 85 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினர் 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். துடுப்பெடுத்தாட்டத்தில் மத்திய கல்லூரி அணி சார்பில் நிரோஜ் 43 ஓட்டங்களையும் ஜெயந்திரன் 36 ஓட்டங்களையும் சௌமிதரன் 28 ஓட்டங்களையும் நிருபன் 26 ஓட்டங்களையும் கரிகரன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. கிரிக்கெட் அணி சார்பில் யது பத்து ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கீதன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சந்துரு 5 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் செந்தூரன் 5 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களையும் மாத்திரம் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கரன் 7 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் பெற்றுக் கொண்டனர்.

216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியினர் மத்திய கல்லூரி வீரர்களின் பந்து வீச்சில் 39 ஓவர்களில் 130 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி சார்பாக கரன் 30 ஓட்டங்களையும் றொசாந் 15 ஓட்டங்களையும் செந்தூர் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பில் கபிலன் சிறப்பாக பந்து வீசி 8 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கரிகரன் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சௌமிதரன் 7 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிசாந்தரூபன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்கள். (அ - 21)

# சிநேகபூர்வ துடுப்பட்டத்தில் அரசடி றெயின்போ வெற்றி

(யாழ்ப்பாணம்)

அரசடி றெயின்போ அணிக்கும் ஸ்கந்தா ஸ்ரார் அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ துடுப்பாட்ட போட்டியில் அரசடி றெயின்போ ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இத்துடுப்பாட்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தா ஸ்ரார் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளினையும் இழந்த ஸ்கந்தா ஸ்ரார் 164 ஓட்டங்களை பெற்றது.

அவ் அணி சார்பாக நிஷாகரன் 64 ஓட்டங்களினையும் ஜெனாகேசன் 30 ஓட்டங்களினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் றெயின்போ அணி சார்பாக தர்சன் 8 பந்து பரிமாற்றங்களினை வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளினையும் அணித்தலைவர் செந்தூரன் துல்லியமாக 8 பந்து பரிமாற்றங்களை வீசி 29 ஓட்டங்களைவிட்டுக்கொடுத்து 3 இலக்குகளினையும் கைப்பற்றினார்.

165 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய றெயின்போ 36.4 ஓவர்களில் வெற்றி இலக்கினை அடைந்தது.

அணி சார்பாக விஷ்ணு 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களினையும் அப்புக்கண்ணா ஒரு ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 23 ஓட்டங்களையும் தர்சன் 17 ஓட்டங்களையும் டர்வின் 15 ஓட்டங்களினையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சிந்துஜன் 6 பந்து பரிமாற்றங்களினை வீசி 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்குகளினையும் நிறுஜன் 8 பந்து பரிமாற்றங்களை வீசி 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து இரண்டு இலக்குகளினையும் கைப்பற்றினர்.

ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பாக அரைச்சதம் பெற்ற நிஷாரனின் போராட்டம் வீணாக அரசடி றெயின்போ அணித்தலைவர் செந்தூரனின் பந்து வீச்சில் அரசடி றெயின்போ வெற்றியினை சுவைத்தது. (அ - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் மக்களின் வாழ்வாதார நிலங்கள் பறிக்கப்பட்ட கதை



கொக்கிளாய் கிராமத்தில் வாழும் 30குடும்பங்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலம் இல்மனைட் கனியத்தை எடுப்பதற்காக கிழக்காசிய நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக நாமல் ராஜபக்சவின் செயலகத்திலிருந்து வந்த தொலைபேசி அழைப்பில் கூறப்பட்டது.

இவ்வாறு லக்பிமா நியூஸ் இணையத்தில் எஸ்.ரட்ணஜீவன் ஏச்.ஹூலே எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்வதென்பது வன்னியில் அவ்வளவு இலகுவான காரியமல்ல. யுத்தத்தன் பிடிக்குள் பல ஆண்டுகளாக அகப்பட்டுத் தவித்த இந்த மக்கள், இலங்கை இராணுவத்தினரின் வன்முறைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருந்தனர்.

இவ்வாறான துன்ப துயரங்களைச் சந்தித்து இதுவரை முகாம்களில் வாழும் இந்த மக்கள் தற்போது புதிய வாழ்வொன்றை வாழ விரும்புகின்றனர். அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் தமது சொந்த முயற்சி மூலம் தமது வாழ்வை மிகமெதுமெதுவாக மீளக் கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளனர். இடிந்து விழும் நிலையிலுள்ள தமது வீடுகளில் இவர்கள் மீண்டும் வாழத் தெடங்கியுள்ளனர்.

பீற்றர் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தை. இவரது சொந்த இடம் முல்லைத் தீவிலுள்ள கொக்கிளாய் எனும் கிராமமாகும்.

யுத்தத்தில் பங்குகொண்ட இரு தரப்புகளினதும் தாக்குதல்களிலிருந்து தனது குடும்பத்தையும் தன்னையும் பாதுகாப்பதற்காக பீற்றர் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தார். தற்போது மீண்டும் புதிய வாழ்வொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது பீற்றரின் நம்பிக்கையாகும். 1980களில் கொக்கிளாயிலிருந்து இடம்பெயர்ந்த இக்கிராமத்தவர்கள் இறுதியில் 2009 இல் மெனிக்பாம் முகாமைச் சென்றடையும்வரை பல இடங்களில் வாழ்ந்துள்ளனர். விடுதலைப்புலிகளினதும் அரசாங்கத்தினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வரையறுக்கின்ற எல்லையாக கொக்கிளாய் காணப்பட்டது.

கொக்கிளாயில் வாழ்ந்த மக்களின் சொந்த தொழில் விவசாயமாகும். இவர்கள் விவசாய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இடம் பெயர்ந்து வாழ்ந்த இந்த மக்கள் விவசாயம் செய்வதற்கான நிலம் இல்லாததால் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டதுடன் தினசரி கூலி வேலை செய்து பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாகினர். இவர்களின் நாளாந்த (வேலை கிடைக்கும் நாட்களில் மட்டும்) வருமானம் ரூபா. 600 மட்டுமே.

ஒக்டோபர் 2011 இல் இலங்கை அரசாங்கமானது, கொக்கிளாய் கிராமத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிவெடிகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளதால் மக்களை மீளக்குடியேறுமாறு அறிவித்தது. இந்நிலையில் கொக்கிளாய்க்கு திரும்பிவந்த பீற்றர் தனது தந்தை தனக்கு வழங்கிய நான்கு பரப்பு காணிக்கான உறுதியை காட்டினார். ஆனால், இவரது நிலத்தை அடையாளங்கண்டு கொள்வதென்பது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. பீற்றர் தனது நிலத்தை அடையாளம் காட்டுவதற்காக பற்றைகளின் ஊடாக செல்லவேண்டியிருந்து. மெனிக்பாமிலிருந்து அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்ட மக்கள் இலங்கை அரசாங்கத்தின் உதவித் திட்டத்தைப் பெறுகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான கூரை விரிப்புகள், சில அடிப்படைப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் போன்றவற்றை இந்திய அரசாங்கம் வழங்கும் அதேவேளையில் இந்த மக்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்திட்டம் போன்றவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்றன. மாசுபடுத்தப்பட்ட கிணறு மற்றும் நீர்நிலைகள் போன்றவற்றால் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தமக்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமப்படுகின்றனர். இவர்கள் யுத்தத்தின்போது தமது பெரும்பாலான உடமைகளை இழந்த நிலையில், வறுமை என்பதை எதிர் கொள்வது சுலபமானதல்ல.

கொக்கிளாயில் மீளக் குடியேற்றப்பட்ட மக்களை பெப்ரவரி 2012 இல் நாமல் ராஜபக்ச சந்தித்த போது, அக்கிராமத்து மக்கள் தமது உடனடித் தேவைகள் பூர்த்தியாக்கப்படும் என நம்பினர். ஆனால், நாமல் ராஜபக்ச இந்த மக்களுக்கு வாக்குறுதிகளைத் தவிர வேறெதனையும் வழங்கவில்லை. கொக்கிளாய் கிராமத்தைப் பார்வையிட்ட நாமல் ராஜபக்ச தம்மிடம் இரக்கத்துடன், அன்புடன் உரையாற்றி தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என பீற்றர் போன்ற பலர் நம்பினர்.

இவர் கொக்கிளாயைப் பார்வையிட்டுத் திரும்பிய அடுத்த நாள், இவரது செயலகத்திலிருந்து பிரதேச செயலருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. கொக்கிளாய் கிராமத்தில் வாழும் 30 குடும்பங்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலம் இல்மனைட் எடுப்பதற்காக கிழக்காசிய நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக நாமல் ராஜபக்சவின் செயலகத்திலிருந்து வந்த தொலைபேசி அழைப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை, குறித்த குடும்பத்தினர் அறிவதற்கு முன்னர், கிழக்காசிய நிறுவனத்தினர் அத்துமீறி நுழைந்து கட்டடங்களைக் கட்டத் தொடங்கினர். தமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை உணர்ந்து கொக்கிளாய் வாழ் மக்கள் தமது பிரதேச செயலரிடம் முறையீடு செய்தபோது, இந்த விடயத்தில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது எனத் தெரிவித்தார் அவர்.

நாங்கள் எம்மிடமிருந்த காணி உறுதிகளை பிரதேச செயலரிடம் காண்பித்தோம். இது அரசாங்கத் தால் வழங்கப்பட்ட உறுதிகள் அல்ல என அவர் எம்மிடம் தெரிவித்தார் என பீற்றர் விபரித்தார். பிரதேச செயலர் தனது மக் களின் பிரச்சினையை ஆராயாது, இந்தக் குடும்பங்களை எதிர்க்க முடியுமா? தற்போது நாட்டில் நிலவும் வன்முறை காரணமாக அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு அனைவரும் அச்சமடைகின்றனர்.

தனது மூதாதையரின் நிலம் பறிக்கப்பட்டதை எண்ணி பீற்றரின் கண்களில் கோபம் தெரிகிறது. இது தொடர்பில் அநியாயம் மேற்கொள்ளப்பட்டது, பீற்றர் போன்றவர்களின் மனச்சாட்சியை உலுக்கியுள்ளது. தமிழர்களின் நிலங்கள் இவ்வாறு பறிக்கப்படுவது எல்லோரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

கொக்கிளாய் கிராமத்திற்கு அருகிலுள்ள கொக்குத்தொடுவாய் எனும் கிராமமானது உயர் பாதுகாப்பு வலயம் என வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் சட்டரீதியற்ற முறையில் சிங்கள விவசாயிகள் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடனும் பாதுகாப்புடனும் தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இதுபோன்று திருகோணமலையில் நிலக்கரி அகழ்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதனால் 4000 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலங்கள் அரசாங்கத்தால் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு சட்டரீதியற்ற வகையில் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ளன. இவ்வாறான நில அபகரிப்புக்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு இழப்பீடோ அன்றி ஆதரவோ வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மாற்று வழிகள் தொடர்பில் எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான சட்டரீதியற்ற நில அபகரிப்புகளும் அவற்றை விற்பனை செய்தலும் நாட்டில் உயர் பீடத்திலுள்ள அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பது மிக வேதனைக்குரிய விடயமாகும். இதனால் இலங்கையர்கள் உண்மையில் எதிர்பார்த்திருக்கின்ற சமாதானம் என்பது நீண்ட காலக் கனவாகவே காணப்படும்.

இது தொடர்பாக அறிவதற்காக இலவசமான சட்ட ஆலோசனைகள் வழங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை நான் அணுகினேன். பீற்றர் போன்ற கொக்குளாய் வாழ் மக்களின் நில அபகரிப்பு தொடர்பாக சட்டவாளர்கள் மற்றும் அரசியல் வாதிகளை அணுகி நான் வினவிய போது இது அரச தலையீடு என்பதால் தம்மால் தீர்வெதனையும் முன்வைக்க முடியாது என அவர்கள் கூறினர். இவ்வாறான பிரச்சினைகளை அறிவதில் இவர்கள் எவரும் அக்கறை காட்டவில்லை. நாட்டில் நிலவும் அச்சநிலையே இதற்கான பிரதான காரணமாகும்.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் பழைய வடுக்களை நினைவு படுத்தக் கூடாது என்பதற்காக நாட்டில் தற்போது புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், பீற்றர் போன்வறவர்கள் புதிய பிரச்சினைகளை சந்திக்கின்றார்கள். தமது சொந்த நிலங்களை இழந்த இந்த ஏழை மக்கள் வேலை தேடி பல மைல்கள் தூரம் செல்ல முடியாதவர்களாக காணப்படுகின்றனர். தமது குடும்பத்தவர்களையும் இளைய பெண்பிள்ளைகளையும் தனிமையில் விட்டுவிட்டு வேறிடங்களுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

தான் வாக்குறுதி வழங்கியதை செய்து முடிப்பேன் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பூநகரி பாலத் திறப்பு நிகழ்வின்போது தமிழ்மக்களிடம் உறுதியளித்திருந்தார். ஆனால் அவரது மகிந்த சிந்தனையால் கொக்குளாய் கிராமத்தில் நிலவும் இடைவெளியை நிரப்ப முடியாதுள்ளது என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களின் உரிமை குறித்து வலியுறுத்து

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிலையான மாதாந்த வேதனம் வழங்கப்படவேண்டும் என்று ஜே.வி.பியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதன்பொருட்டு ஹற்றன் நகரப் பகுதிகளில் நேற்று முன்தினம் தெளிவூட்டல் துண்டு பிரசுர விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த தெளிவூட்டல் நடவடிக்கையின் நோக்கத்தை அந்த தொழிற்சங்கத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராமலிங்கம் சந்திரசேகரன் விளக்குகிறார்.

இதனிடையே இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு கடந்த 3 மாதங்களுக்கான வேதனம் இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை என அதன் தொழிற்சங்க்ங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

கடந்த செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெரும்பாலான ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய முறையான வேதனம் இதுவரை கிடைக்கவில்லை என்று அகில இலங்கை போக்குவரத்து சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் வேதனத் தொகைகள் வழங்கப்படாத பட்சத்தில் எதிர் வரும் நாட்களில் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

அதேவேளை அரசியல்வாதிகள் வழங்கி வரும் உறுதிமொழிகளுக்கு தொடர்ந்தும் ஏமாறப் போவதில்லை என்று ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பொது செயலாளர் மஹிந்த ஜயசிங்க கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஒருநாள் அடையாள தொழிற்சங்க நடவடிக்கையின் போது உரிய தீர்வுகள் கிடைக்காத பட்சத்தில் தொடர்ச்சியாக பாரிய போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ-11)

# ரஷ்ய- நோர்வே உறவில் மாற்றம்; தகவல் பங்காளனாக ஈழத்தமிழன்

(கொழும்பு)

நோர்வே அரசு இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் ரஷ்யாவுடன் புதிய இராஜதந்திர உறவுகளை உருவாக்கி வருகிறது. ரஷ்யாவுக்கும் நோர்வேக்கும் இடையிலான புதிய இராஜதந்திர திருப்பம் வடதுருவ அரசியல் கொள்கையில் உருவாக்கப்பட்டு வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவ் இணையத்தளம் மேலும் குறிப்பிடுகையில்,

இதன் ஒரு அங்கமாக கடந்த வாரம் ரஷ்ய அரசுக்கும் நோர்வே அரசுக்கும் இடையே புதிய பல்கலைக்கழக ஆய்வுகள் மற்றும் வெளியுறவு கொள்கை தொடர்பான உடன்படிக்கை ஒன்று ரஷ்யாவின் வடதுருவ பல்கலைக்கழக ஆய்வு பிரிவில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த இரு நாட்டு உடன்படிக்கை நிகழ்வில் பல இராஜதந்திரிகள், ரஷ்யஅமைச்சர்கள்,பாராளுமன்றஉறுப்பினர்கள், ஆய்வாளர்கள், அரசியல்நிபுணர்கள், இருநாட்டுகொள்கை வகுப்பாளர்கள் என்று பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இருநாட்டு உறவு நிகழ்ச்சியின் தகவல் பங்காளனாக ஈழத்தமிழன் ஒருவரை ஏற்பாட்டுக் குழு தெரிவு செய்திருந்தது.

ஈழத்தமிழரான நோர்வே செய்தி நிறுவனத்தின் தோற்றுவிப்பாளரும் செய்தியாளருமான நடராஜா சேதுரூபன் ஏற்பாட்டுக்குழுவின் அழைப்பை ஏற்று இந்த வரலாற்று முக்கியத்துவமான இரு நாட்டு உடன்படிக்கையில்கலந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து ரஷ்யாவில் புதிய ஊடக புரட்சி உருவாக்க வேண்டும் என்ற தலைப்பில் ரஷ்ய நாட்டு ஊடக கற்கைகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஈழத் தமிழரான நடராஜா சேதுரூபன் நோர்வேயுடனான ரஷ்ய உறவு எதிர்காலத்தில் நோர்வே ஈழத் தமிழர் விடயத்தை கையாளும் வெளியுறவுக்கொள்கைக்கு சாதகமாக ஒரு வெளியுறவுக் கொள்கையை ரஷ்யா இந்தியாவுடனும் நோர்வேயுடனும் இணைந்து எடுக்குமாக இருந்தால் அல்லது அதற்கான அழுத்தத்தை நோர்வேயும் இந்தியாவும் அமெரிக்காவுடன் இணைந்து ரஷ்யாவுக்கு இராஜதந்திர மட்டத்தில் கொடுக்குமாக இருந்தால் அத்தகைய ஒரு புதிய மாற்றம் ஈழத்தமிழருக்கு ஐக்கிய நாடுகள் சபையில் சாதகமான ஒரு முடிவை எதிர்காலத்தில் உருவாக்கும் எனவும் தெரிவித்தார். (அ-9)

# 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டாம்

## மு.கா.ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கூடாது எனக் கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடிதம் அனுப்பியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கையொப்பமிட்டு கடந்த நவம்பர் 28 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை மூலம் அரசியல் அதிகாரம் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1259-பிரான்சின் ஒன்பதாம் லூயி இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றியும் பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி நோர்மண்டி உட்பட ஐரோப்பாவில் உள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்கு ஹென்றி உரிமை கொண்டாடுவதில்லை எனவும் ஆங்கில புரட்சியாளர்களுக்கு லூயி ஆதரவு வழங்குவதில்லை எனவும் முடிவாகியது.

★ 1639- ஜெரிமையா ஹொரொக்ஸ் முதன்முதலாக வெள்ளிக் கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.

★ 1791-உலகின் முதலாவது ஞாயிறு இதழ் தி ஒப்சேர்வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.

★ 1829-ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவில் சதி முறையை ஒழிக்க ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ 1918-முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு பேச்சுவார்தை நடத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் பிரான்ஸ் சென்றார். பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற் தடவையாகும்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: யூகோஸ்லாவியாவின் எதிப்புத் தலைவர் மார்ஷல் டீட்டோ ஜனநாயக யூகோஸ்லாவிய அரசாங்கம் ஒன்றை தற்காலிகமாக அமைத்தார்.

★ 1945-ஐக்கிய அமெரிக்கா ஐ.நாவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்து செனட் அவை வாக்களித்தது.

★ 1958-பிரெஞ்சு அதிகாரத்தின் கீழ் டொஹெமி சுயாட்சி உரிமை பெற்றது.

★ 1967-வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் தெற்கு வியட்நாம் படைகள் மேக்கொங் டெல்ட்டா பகுதியில் வியட்கொங் படைகளுடன் மோதின.

★ 1971-இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை ஆராய ஐ.நா. பாதுகாப்பு அவை அவசரமாகக் கூடியது.

★ 1971-பாகிஸ்தானின் கடற்படையினரையும் கராச்சி நகரையும் இந்தியக் கடற்படையினர் தாக்கினர்.

★ 1976-ஆச்சே விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டது.

★ 1991-டெரி அண்டர்சன் என்ற அமெரிக்க ஊடகவியலாளர் கடத்தப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பின்னர் பெய்ரூட்டில் விடுவிக்கப்பட்டார்.

★ 1991-ஐக்கிய அமெரிக்காவின் பான் ஆம் விமான சேவை தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.

★ 1992-ஐக்கிய அமெரிக்கா சோமாலியாவுக்கு 28 ஆயிரம் அமெரிக்கப் படைவீரர்களை அனுப்பியது.

★ 2005-ஹொங்கொங்கில் பல்லாயிரக் கணக்கானோர் ஜனநாயகம் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ 2006-பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் பதினேழு தமிழ் ஊழியர்கள் கிழக்கு மாகாணத்தின் மூதூரில் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1919-ஐ.கே. குஜரால், 15 ஆவது இந்தியப் பிரதமர்

★ 1969-ஜெய்-சி, அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்

★ 1977- அஜித் அகர்கர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1122-ஒமர் கய்யாம், பாரசீகக் கவிஞர் (பி.1048)

★ **1976-ந.பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (பி.1900)**

### சிறப்பு நாள்

★ இந்திய கடற்படையினர் தினம்

#### ந.பிச்சமூர்த்தி

ந.பிச்சமூர்த்தி அண்மைய தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர். தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர். இவரின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

#### வாழ்க்கை

கும்பகோணத்தில் வாழ்ந்த நடேச தீக்ஷிதர்– காமாட்சியம்மாள் தம்பதியருக்கு நான்காவது குழந்தையாகப் பிச்சமூர்த்தி பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் வேங்கட மகாலிங்கம்.

பிச்சமூர்த்தி கும்பகோணத்தில் தன் பாடசாலைப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் முடித்தார். தத்துவத்தில் பட்டம் பெற்று சென்னை சட்டக்கல்லூரியில் பட்டம் பெற்றார். 1925 முதல் 1928 வரை வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்.

பிச்சமூர்த்தி நவ இந்தியா பத்திரிகையில் சிறிது காலம் பணியில் இருந்தார். இவரின் எழுத்துக்கள் சுதேசமித்திரன், சுதந்திரச் சங்கு, தினமணி, மணிக்கொடி போன்ற பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின.

பிச்சமூர்த்தி இயல்பிலேயே ஆன்மீக விடயங்களிலும் துறவியிலும் நாட்டம் கொண்டவர். குடும்ப வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த பின்னரும் ஒரு ஆண்டு காலம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சந்நியாசத்தை விரும்பி ஊர் ஊராக அலைந்தார். தன்னைத் துறவியாக்க வேண்டி தனக்கு உபதேசம் செய்யுமாறு ரமண மகரிஷியிடமும் சித்தர் குழந்தை சாமியிடமும் அணுகி நின்றார். ஆனால், அவர்கள் இல்லற வாழ்க்கைதான் பொருத்தமானதென்று உபதேசித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலை தொடர்பில் நாடுகளுக்கு விளக்கப்படும்

## அமெ.விற்கான இலங்கை தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உண்மை நிலைமையை எடுத்துரைக்க தயங்கப் போவதில்லை என அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் பிரசாரம் செய்யப்பட்டு வரும் பிழையான கருத்துக்கள் முறியடிக்கப்படும்.

சில நாடுகள் இலங்கை தொடர்பில் தப்பான அபிப்பிராயத்தை கொண்டுள்ளன.

குறித்த நாடுகளுக்கு போதியளவு விளக்கம் அளிக்கப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து பல நாடுகளில் சாதகமான நிலைப்பாடு காணப்படுகி ன்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏன்சல்ஸ் நகரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நிலவரங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென சர்வதேசமன்னிப்புசபை கோரியுள்ளது. அதுமட்டுமன்றி ஐ.நா. பொதுச் செயலாளர் நல்லிணக்க செயற்பாடுகளை விரைந்து செயற்படுத்துமாறும் கோரியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-9)

# கொழும்பு ஐ.நா. அலுவலகத்தை குற்றம் சுமத்தி மற்றுமொரு மனு

## அமெரிக்கா தயாரிக்கிறது என்கிறார் வீரவன்ச

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் மீது குற்றம் சுமத்தி இலங்கைக்கு எதிரான மற்றுமொரு மனுவை அமெரிக்கா தயாரித்து வருகிறது என்றும் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறும் மனித வுரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தில் இம்மனு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரசன்ச தெரிவித்தார்.

இது தருஸ்மன் அறிக்கையை பார்க்கிலும் பாரதூரமாக அமையுமென்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல ஏகாதிபத்திய நாடுகள் இலங்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தவறான கருத்துக்களை சேகரித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இறுதிக்கட்ட போரில் புலிகளின் தலைவர் உட்பட முன்னணி உறுப்பினர்களைக் காப்பாற்ற செயற்படாமை, அக்காலகட்டத்தில் பான் கீ மூனை இலங்கைக்குதருவிக்கசெயற்படாமை, ஐ.நா. அமைதிப்படையின் சேவையை பெறாமை போன்றவை ஐ.நா. கொழும்பு அலுவலகத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும்.

இது தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றையும் கோருவதற்கும் புதிய யோசனையில் குறிப்பிடப்பட்டு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தாருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கும் புதிய பிரேரணையில் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-9)

## ஆறுமுக நாவலர் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழா நாளை புதன் கிழமை நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்குருபூசை விழாவினை இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி. மாணிக்கராஜ சர்மா அனந்தலெட்சுமி தலைமையேற்று நடத்துகின்றார். இதே வேளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் வாழ்வும் என்ற சிறப்புச் சொற்பொழிவினை க.ஈஸ்வரன் ஆசிரியர் நிகழ்த்தவுள்ளார். (அ)

# வீதி புனரமைப்பில் ஈடுபடுவோருக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

## பணியாளர்கள் கடும் விசனம்

(ஆனையிறவு)

பரந்தன்-பூநகரி பிரதான வீதியை புனரமைக்கும் ஒப்பந்த நிறுவனம் அதன் பணியாளர்களுக்கு சம்பளத்தை வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த வீதிப்புனரமைப்பை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஒப்பந்த நிறுவனமானது ஒக்டோபர், நவம்பர் மாத சம்பளத்தை வழங்காமையால் பணியாளர்கள் தமது வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் இத்தொழிலில் சம்பளம் வழங்கப்படவில்லை என்றால் என்ன செய்வது என அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இப் பணியாளர்களின் நிலைமையை கருத்திற் கொண்டு குறித்த திகதிக்கு சம்பளத்தை வழங்கி உதவுமாறு பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)




கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டட நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சொய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி உ.புவனராஜா அடிக்கல்லை நாட்டுவதைப் படத்தில் காணலாம். (படம்:- வட்டக்கச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிசானாவுக்கு பொதுமன்னிப்பு?

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு அரச பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவின் இளவரசர் மரண தண்டனை கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க தீர்மானித்துள்ளார். மன்னருக்கு இறைவனின் ஆசி வேண்டி இவ்வாறு மரண தண்டனை கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக இளவரசர் சல்பின் பின் அப்துல் அசீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த பொதுமன்னிப்பு பெறுவோர் பட்டியலில் ரிசானாவும் உள்ளடங்கியிருக்கலாம் என நம்பிக்கை வெளியிட்டுள்ளதுடன் ரிசானாவை விடுதலை செய்யும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (அ-9)

# பேருவளை மீன்பிடி துறைமுக ஐஸ் தொழிற்சாலையில் தீ!

பேருவளை மீன்பிடித்துறைமுகத்திலுள்ள ஐஸ் தொழிற்சாலையொன்று திடீரென தீப்பற்றிக் கொண்டது. நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் பேச்சாளர் பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தீயணைப்பு பிரிவினருடன் கடற்படையினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக அவர் குறிப்பிட்டார். எனினும் இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென்றும் இது தொடர்பான விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

தனியாருக்கு சொந்தமான ஐஸ் தொழிற்சாலையொன்றிலேயே இத் தீவிபத்து இடம்பெற்றுள்ளது. (அ-9)

# சிறைச்சாலை ஆணையாளர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

சிறைச்சாலை ஆணையாளர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளர் கொடிப்பிலிக்கு பதிலாக புதிய ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொதுத்துறை அதிகாரியான கே.கித்சிறி சிறைச்சாலை ஆணையாளராக நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-9)

# ரி-56 ரக துப்பாக்கிகள் பாதுகாப்பு அமைச்சிடம்

சிறைச்சாலைகளில் காணப்பட்ட ரி-56 ரக ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ கொடிப்பிலி சிறைச்சாலை பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பதிலாக ரிப்பீட்டர் ரக ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

வெலிக்கடை சிறையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து ரி-56 ரக ஆயுதங்களை பயன்படுத்தி அதிகாரிகளை தாக்கியிருந்தனர். இத்துப்பாக்கி மோதலில் 27 சிறைக்கைதிகள் பலியானதோடு 45 இற்கும் மேற்பட்ட கைதிகள் படுகாயம் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-9)

# இலங்கை கப்பல் மடக்கிப் பிடிப்பு

சர்வதேச கடற்பரப்பில் வைத்து இலங்கைக்கு இரசாயன பொருட்களை கொண்டு சென்ற கப்பல் ஒன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இரசாயன பொருட்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களை பாதுகாக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக இரசாயன ஆயுதங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

சர்வதேச பொலிஸார் மற்றும் ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புடன் இவ்வாறு கடற்கொள்ளையர்களின் சவால்களை எதிர்நோக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபை அறிவித்துள்ளது. (அ-9)

# கடலில் காணர்மல்போன நால்வர் மீட்கப்பட்டனர்

கல்கிசை கடலில் காணாமல் போனதாக கூறப்படும் நால்வர் மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தக் குழுவினர் கடலுக்கு சென்ற நிலையில் நேற்று கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

கல்கிஸை கரையிலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் குறித்த நால்வரும் கடலில் நீந்தச் சென்றுள்ளனர். குறித்த காலத்திற்குள் அவர்கள் மீள திரும்பாமையை அடுத்து இவர்கள் தேடப்பட்டு வந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களை தேடும் பணியில் கடற்படையின் சுழியோடிகளும் விசேட படகுகளும் ஈடுபடுத்தப்பட்டனர்.

முன்னதாக குறித்த பிரான்ஸ் பிரஜை உள்ளிட்ட நால்வரும் கடலுக்கு சென்ற படகை கடற்படையினர் மீட்டனர். சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-9)

# பிராணாயாமப் பயிற்சியும் அதன் பயன்களும்

பிராணனை அடக்கி ஆள்வதே பிராணாயாமம் எனப்படும். பிராணன் எனப்படுவது நம் உடலில் உள்ள சக்தியே. அதாவது சுவாசப்பையின் இயக்கத்தை அடக்கி ஆள்வதாகும்.

பிராணன் சுவாசப்பைகளை இயக்க அவ் இயக்கத்தினால் காற்று உள்ளிழுக்கப்படுகிறது. பிராணாயாமம் உயர்வான யோகமாகும். இந்த மூச்சின் அற்புத சக்தியை தெரிந்து கொண்டு அதை சரிவர இயங்க வைத்தால் அபாரமான பலன்களை அடையலாம். அதன் பெயரே பிராணாயாமம்.

ஆசனமும் பிராணாயாமமும் இரண்டு கண்களை போன்றவை. பிராணாயாமம் அழியா இயல்பை தரும் மூச்சுப்பழக்கம். அஷ்டாங்க யோகத்தில் இது ஓர் அங்கம். கடயோகத்திலும் பிராணாயாமம் முக்கிய இடம் வகிக்கிறது. நாம் சுவாசிக்கும் போது காற்றிலுள்ள பிராணவாயு நுரையீரலில் உள்ள நிணக்குழாய்கள் வழியாக, இரத்தக்குழாய்களுக்குள் செல்கிறது.

கழிவுப் பொருளான கரியமில வாயு நுரையீரலிலிருந்து வெளிமூச்சின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. பிராணா வாயுவை நுரையீரல் வழியாக இரத்தத்தோடு சேர்ப்பதும் தேகத்தில் உண்டான கழிவுப்பொருளான கரியமிலவாயுவை நுரையீரலிலிருந்து வெளிக்கொண்டு வருவதும் சுவாசத்தால் நடைபெறுகிறது.

மக்களில் பெரும்பாலானோர் நுரையீரல்களை சரியாக பயன்படுத்துவதில்லை.

பிராணாயாமத்தில் இரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று நிலைகள் உள்ளன. சுவாசத்தை வெளிவிடுவது இரேசகமாகும். சுவாசத்தினுள்ளே நிறுத்துவது கும்பகம். உள்ளே இருப்பது பூரகம்.

16 மாத்திரையளவு இடகலையால் மூச்சை உள்ளுக்கு இழுத்தல் பூரகமாகும். 64 மாத்திரை காலம் உள்ளே தடுத்து வைத்தல் கும்பகமாகும். 32 மாத்திரை காலம் மெல்ல வெளிப்படுத்தல் இரேசகமாகும்.

பிராணாயாமத்தின் படிகளே நாடி சுத்தியாகும். நாடி சுத்தி பிராண்ணாயாமம் போன்ற மூச்சுப்பயிற்சியினை மேற்கொண்டால் உடல் பளிங்குபோல் ஒ ளிவிட்டு விளங்கும்.

ஆசனங்கள் பழகும் போதும் களைப்பு ஏற்படும் போதும் இடையே நாடி சுத்தி செய்யலாம். சாதாரணமாக மூச்சுவிடும் போது காற்றுமார்பு வரைதான் செல்லும். நாடி சுத்தியில் மூலாதாரம் வரை செல்லும்.

சுவாசிப்பதற்கு மார்புத்தசைகள் உதர விதானம், வயிற்றுத்தசைகள் உதவுகின்றன. மார்பின் மூலம் சுவாசிப்பதை மார்புச் சுவாசம் என்றும் உதரவிதானத்தின் மூலம் சுவாசிப்பதை உதரவிதானச்சுவாசம் என்றும் வயிற்றுத்தசைகள் மூலம் சுவாசிப்பதை வயிற்றுச்சுவாசம் என்றும் கூறுகிறார்கள்.

ஆழ்ந்த மூச்சு விடுவதே ஆரோக்கியமான மனிதனின் அடையாளம். இதனை நீண்ட ஆழ்ந்த மூச்சு என்கின்றோம். பிராணாயாம மூச்சுப்பயிற்சியின் போது இத்தகைய சுவாசம் ஏற்படுகிறது.

பிராணாயாம பயிற்சியின் போது வெளியிலிருந்து இழுக்கப்பட்ட காற்றை சிறிது நேரம் மூச்சை அடக்கி உள்ளே நிறுத்த வேண்டும்.

நுரையீரல் நிறைய மூச்சை வாங்கினால் தான் நம் உடலினுள்ளே இருக்கும் ஜீவ அக்னி நன்றாக எரியும். உடலுக்கு அனலும் சக்தியும் உடல் முழுவதும் உணவு அணுக்கள் பிராண வாயுவுடன் கலந்து பிரிக்கப்படுவதாலேயே கிடைக்கின்றது. எனவேதான் யோக பயிற்சியில் பிராணாயாமம் தலையாய பயிற்சியாக விளங்குகிறது.



மூச்சுப்பயிற்சி பயில்வதற்கு வசதியான எளிமையான ஆசனம் பத்மாசனம் ஆகும். ஆனால், பருமனாக இருப்பவர்களுக்கு பத்மாசனத்தில் அமர்வதால் சிரமம் ஏற்படலாம்.

அவர்கள் சித்தாசனம், சுகாசனம், முக்தாசனம், வஜ்ராசனம், ஸ்வஸ்திக்காசனம் இவைகளில் ஏதாவது ஒன்றில் பிராணாயாம பயிற்சி செய்து வரலாம்.

பிராணாயாமத்தில் அமரும் போது மார்பு, கழுத்து, தலை மூன்றும் ஒரேநேர் கோட்டில் இருக்க வேண்டும். தூய்மையான மறைவான இடத்தில் தக்கவிரிப்பின் மீது அமர்ந்து மனதை ஒருமைப்படுத்தி ஆசனம் செய்ய வேண்டும்.

மூச்சை உள்ளே அடக்குதல் எனும் கும்பகம் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை அந்தர்ய கும்பகம், பாக்ய கும்பகம், கேவல கும்பகம் என மூன்று வகையாகும். அந்தர்ய கும்பகம் என்பது மூச்சை உள்ளிழுத்து அப்படியே நிறுத்துவது ஆகும். பாக்ய கும்பகம் மூச்சை வெளியிட்டு உள்ளிழுக்காமல் அடக்குவதுமாகும். கேவல கும்பகம் தீடீரென மூச்சை அடக்குவதாகும். இடது நாசியின் வழியாக மூச்சை இழுத்து வெளிவிடுதல் இடகலை என்பதாகும்.

வலது நாசியின் வழியாக மூச்சை இழுத்து விடுதல் பிங்கலை என்பதாகும். பிங்கலையால் மூச்சை வெளியிடுவதற்கு வஞ்சகம் என்றும் பெயர்.

### சுகப்பிராணாயாமம்

இதனை பத்மாசனத்தில் அமர்ந்து சுலபமாக செய்து பழகலாம். முதலில் இடது நாசித்துவாரம் வழியாக மூச்சை உள்ளிழுக்க வேண்டும். சிறிது நேர மூச்சை உள்ளே அடக்கிய பின் வலதுமூக்குத்துவாரம் வழியாக காற்றை வெளியிட வேண்டும். திரும்பவும் வலது மூக்குத்துவாரம் வழியே காற்றை உள்ளிழுத்து இடதுமூக்குத்துவாரம் வழியே வெளியிடல் வேண்டும். இதுபோல பயற்சியின் போது ஐந்துமுறை செய்துவரலாம்.

### ஆதம் பிராணாயாமம்

நுரையீரலில் மனதை செலுத்தி பயிற்சி செய்யும் பிராணாயாமம் இது. உதரவிதானத்தின் மேல் மார்பில் ஒரு கையை வைத்துக் கொண்டு நீண்டசுவாசத்தை உள்ளிழுத்து வெளியிட வேண்டும். அப்போது கையசைவதை உணரலாம். இதன்மூலம் காற்றானது நுரையீரலின் கீழ் பாகத்தை கடக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இந்நிலையில் மூன்று முதல் ஆறு முறை சுவாசித்து இதனை உணரலாம்.

### மத்யம் பிராணாயாமம்

நுரையீரலின் மத்திய அல்லது நடுப்பாகத்தின் சுவாசத்தை கட்டுப்படுத்த ஒரு கையை இரண்டு மார்புகளுக்கிடையில் வைக்க வேண்டும். நீண்ட உள்மூச்சை இழுத்து வெளிவிடும் போது கையானது வெளிப்புறமாக நகர்வதை உணரலாம். இவ்வகை பிரணாயாமத்தின் 3 முதல் 6 முறை சுவாசிக்கலாம்.

### ஆத்யம் பிராணாயாமம்

நுரையீரலின் மேல் பாகத்தின் சுவாசத்தை கட்டுப்படுத்த ஒரு கையை மேல் மார்பின் மீது அதாவது தோள்பட்டை எம்புக்கு கீழே வைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட உள்மூச்சை இழுத்து பின்வெளியிட வேண்டும்.

அப்போது கைவிரல்கள் மேல் புறமாக உயருவதை காணலாம். அப்போது தசைகள் அசைவதை தவிர்க்க வேண்டும்.

### வியாக்ர பிராணாயாமம்

உதர விதானத்தை பலப்படுத்தி சுவாசம் பயிலலாம். இம்முறையால் சுவாசிக்கும் திறன் அதிகரித்து பிராணாயாமம் பயிற்சியினால் மேல் மூலைப்பகுதியை அதிகமாக செயற்பட வைக்க முடியும்.

இதனால் மூளையின் சுவாச மண்டலத்தை கட்டுப்படுத்த முடியும்.

பிராணாயாம பயிற்சியினால் சுத்தம் செய்யப்படும் இரத்தம் உடல் முழுவதும் பரவ முடியும். அதனால் உடலிலுள்ள சுரப்பிகள் நன்றாக இயங்கும் திறனை பெறுகின்றன.

தீய உணர்ச்சிகள் கட்டுப்பட்டு பொறுமை, நிதானம், நட்பு, சகிப்புத்தன்மை போன்ற நற்பண்புகள் மேலோங்கும். சுவாசத்தை கட்டுப்படுத்துபவனுக்கு மனதையும் கட்டுப்படுத்த முடியும். பிராணாயாமம் பயில்பவருக்கு நல்ல தோற்றம், மகிழ்ச்சி, உயிர் சக்தி, நல்ல பலம், தேக ஆரோக்கியம், மனதை ஒருமைப்படுத்தும் வல்லமை யாவும் ஏற்படும்.

### நாடிசுத்தி பிராணாயாமம்

நாடிகள் அசுத்தம் நிறைந்து இருக்குமானால் வாயுவானது நாடிகளில் நுழைவது கடினம். எனவே, பிராணாயாமம் பயில்வதற்கு முன்னர் நாடிகள் சுத்தம் செய்ய வேண்டும்.

### பஸ்திரிகா

நாடிசுத்தியில் இது ஒரு வகையாகும். பஸ்திரிகாவில் பல வகை உண்டு. பத்மாசனத்தில் அமர்ந்து இருபது தடவைகள் கபாலபதி பயில வேண்டும். உள்மூச்சு, வெளிமூச்சின் போது வேகமான சத்தம் வரவேண்டும். இது அடிவயிற்றுக்கும் நுரையிரலுக்கும் ஏற்ற பயிற்சியாகும். இதனால் ஆஸ்துமா, காசநோய், மூக்கு தொந்தரவுகள் கட்டுப்படும்.

### சித்காரி பிராணாயாமம்

நாக்கை மடித்து சுவாசம் செய்வதற்கு சித்காரி பிராணாயாமம் என்று பெயர். இந்த வகை பிராணாயாமத்தில் வாயினால் சத்தம் எழுப்பப்படுகிறது. சித்காரியில் வாயை சிறிது திறந்து நாக்கின் நுனியை முன் வரிசை கீழ் பற்களை தொடுமாறும் மடக்கி வைத்துக் கொண்டு சிறிது சிறிதாக காற்றை உள்ளிழுக்க வேண்டும்.

சிறிது நேரம் அடங்கிய பின்னர் மூச்சை இரண்டு நாசித்துவாரங்கள் வழியாக வெளியிட வேண்டும். இந்த வகை பிராணாயாமத்தில் தாகம், பசி, சோம்பல் முதலியன நீங்குகின்றன. இதனால் குண்டலினிசக்தி அதிகரிக்கும்.

### ப்ரமாரி பிராணாயாமம்

இந்த பிராணாயாமம் தேனி போல் ஒலிஎழுப்பும் வகையாகும். இந்த சுவாசத்தை பயிலும் போது தேனி போன்று ஒலி எழுப்பும். எனவேதான் ப்ரமாரி என்று இது பெயர் பெற்றது.

மூச்சை உள்ளிழுக்கும் போது சத்தம் எழுப்புவது சிரமம் என்றாலும் படிப்படியாக முயற்சி செய்து பயிலலாம். இந்த சத்தம் குறட்டையை போன்று மெதுவாகவும் சீராகவும் இருக்கும்.

இந்த வகை பிராணாயாமத்தால் கண், காது, மூக்கு, வாய் ஆகிய உறுப்புக்களுக்கு நன்மை உண்டாகும்.

பிராணாயாமத்தால் உடலிலுள்ள அனைத்து சுரப்பிகளும் நன்றாக இயங்கும் திறனை பெறும்.

**ஆசிரியர் ஜெகாதா**

Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

# நிரந்தர கட்டடம் இல்லாது இயங்கும் உடையார்கட்டு பிரதேச உபஅஞ்சலகம்

(முல்லைத்தீவு)

உடையார்கட்டு உபஅஞ்சல் அலுவலகம் நிரந்தரமான காணி, நிரந்தர கட்டடம் என்பன இன்றி இடத்துக்கிடம்மாறி சேவையாற்றுவதாக அப்பகுதிமக்கள்விசனம்தெரிவித்துள்ளனர்.

மேற்படி உபஅஞ்சல் அலுவலகத்திற்கு 34 ஆண்டுகளாகியும் நிரந்தர காணி, நிரந்தர கட்டடம் இன்மை பெரியதொரு குறைபாடாக உள்ளது. இவ் உப அஞ்சல் அலுவலகமானது ஆரம் பிக்கப்பட்டகாலத்தில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்ததுடன் பின் னர் தனியார் காணிகளில் இயங்கி வந்தது.

தற்போது உடையார்கட்டு தெற்கு ஆர்.டி.எஸ். கட்டடத்தில் ஆயிரத்து 500 ரூபா வாடகையில் இயங்கி வருகின்றது தற்போது இக்கட்டடமும் போரினால் சேதமடைந்து காணப்படுகின்றது. இவ் உப அஞ்சல் அலுவலகத்திற்கும் மின்சாரம் இன்மைபெரும் குறைபாடாகவுள்ளது.

இதனால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

அத்துடன் தளபாடவசதி, கணனி வசதி, தொலைபேசி வசதி என்பன இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மலசலகூடவசதி, குடிநீர் வசதி, தங்குமிட வசதி என்பன இல்லாத நிலை காணப்படுகிறது. இவ் உபஅஞ்சல் அலுவலகத்தில் ஒரு தபாலதிபரும் 2 ஊழியர்களுமே பணிபுரிகின்றனர். எனவே சனத்தொகை கூடுதலாக காணப்படும் நிலையில் இன்னும் ஒரு ஊழியர் தேவையாகவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ் உப அஞ்சல் அலுவலகத்தில் உடையார் கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, சுதந்திரபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து 650 குடும்பங்களுக்கு மேல் தபால் சேவை பெறுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இந்நிலையை கருத்திற்கொண்டு நிரந்தர கட்டடத்தை அமைத்து எல்லாவசதிகளுடனும்தாம்தபாற்சேவையை பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

## அமரர் வீரசிங்கத்தின் 48 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவு பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 48 ஆவது நினைவு தினம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் இ.இராஜராம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் பயிலும் மாணவர்கள் பாவனைக்காகப் பேசும் கைக்கடிகாரங்கள், எம்.பி.3 Players என்பவற்றை இலண்டனில் வசிக்கும் சோமா ராஜேந்திரனும் அவரது நண்பர்களும் இணைந்து அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.



'தேசத்துக்கு நிழல்' தேசிய மரநடுகை வேலைத் திட்டத்தின் கீழ் மரம் நாட்டும் நிகழ்வு அண்மையில் யா/ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் கே.அருளானந்தம் மரம் நாட்டுவதையும் ஆசிரியர் மாணவர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.





கந்தரோடை சுப்பிரமணிய முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் சி.ஹரிகரன் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



சைவ சமயத்தின் அண்மைக் கால அற்புதங் களை வருடந் தோறும் இலவசமாக நூல் வடிவில் வெளியீடு செய்யும் ஆத்மீக சாதனையாளர் சி.சிவகுமாரனின் கௌரவிப்பு விழா அண்மையில் பண்டத்தரிப்பு வடலியடைப்பு பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரம்மஸ்ரீ ஷண்முகேஸ்வரக் குருக்கள் விழா 'நாயகனுக்கு பொன்னாடை போர்த்துவதைப் படத்தில் காணலாம்.





யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் பட்டப்பின் ஆங்கில டிப்ளோமா என்ற புதிய கற்கை நெறி கடந்த முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் உரையாற்ற விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள் : சாளின்



வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் மக்கள் வங்கி யாழ்ப்பாண பிராந்தியம் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கினை அண்மையில் நெல்லியடி, சாவகச்சேரி, புத்தூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தியது. இவ் இலவச கல்விக் கருத்தரங்கின்போது.......




யா/அல்லாரை அரசினர் மகா வித்தியாலயத்தில் குறைந்த காலத்தில் பயன்தரும் நல்லின தென்னங்கன்றுகள் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தென்மராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் தென்னங்கன்றை நாட்டி வைப்பதையும் அருகில் தென்மராட்சி லயன்ஸ் கழக தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



நிகழ்வின் நிழல்கள்





ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நிர்மாணம் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை பேரூந்து தரிப்பிட நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி பேரூந்து தரிப்பிடத்தை திறந்து வைப்பதையும் நிர்மாணம் செய்யப்பட்ட புதிய பேரூந்து நிலையத்தையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் தவறான வழியில் அடைந்துவிட முடியாது.

–கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சட்டவரையறைக்குள் எல்லோரும் வாருங்கள்

பிரச்சினைக்கான தீர்வு எட்டிச் செல்லும் போது நாட்டில் குழப்பங்களும் கலகங்களும் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்பது நிதர்சனமானது.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் இது நிஜமாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

வன்னிப் போர் முடிபுற்ற கையோடு இனப் பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருப்பாராக இருந்தால், நாட்டில் நிரந்தரமான அமைதி ஏற்பட்டிருக்கும்.

அதேநேரம் யுத்தம் முடிந்த கையோடு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்கியிருப்பர்.

இதற்கு மேலாக போருக்குப் பின்பு நிரந்தர அமைதி ஏற்பட்ட நாடாக இலங்கை சர்வதேச சமூகத்தால் பேசப்பட்டிருக்கும்.

ஆனால், இவை எவற்றுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தர்ப்பம் கொடுக்காமை அவர் விட்ட மிகப் பெரும் தவறு.

இத்தகைய தவறின் காரணமாகவே இன்று வரை; இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை வேண்டுமென்ற கோஷங்கள் எழுந்தவண்ணமுள்ளன. இந்தக் கோஷங்கள் சாதாரணமானவையல்ல. அவை ஐ.நா சபையில் எழுப்பப்படுகின்றன.

ஈழத் தமிழர் விடயத்தில் ஐ.நா சபை பொறுப்பற்று நடந்துவிட்டது என்ற வாதத்தை ஐ.நா ஏற்றுக் கொள்ளவும் மறுக்கவில்லை.

எனவே போருக்குப் பின்– மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஐ.நா சபை தனக்கு இருக்கக்கூடிய அக்கறைப் பாட்டையும், பொறுப்பையும் அதிகமாக உணர்கின்றது என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

கிரந்தம் முற்றி பௌத்திரமாக்குதல் என்ற ஊர்ப் பழமொழியின் நிலையில்தான் இலங்கை அரசின் சமகாலமும் எதிர்காலமும் இருக்கின்றது என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

எதுவாயினும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசு சுயமாக முன்வந்து பிரச்சினையைத் தீர்த்தல் அல்லது கட்டாயத்தின் பேரில் செய்தல் என்ற இரு நிலைக்குள் அகப்படப்போவது சர்வ நிச்சயம்.

இதில் எது தனக்குப் பொருத்துடையது என்பதை இலங்கை அரசு முடிபெடுக்க வேண்டுமாயினும் அந்த முடிபில் காலஅசைவின் பங்களிப்பும் உண்டென்பது உணரப்பட வேண்டும்.

இவையாவற்றுக்கும் அப்பால் சட்டங்களைத் தெரிந்துகொண்டு அதற்கு மதிப்பளிக்கும் வகையில் அனைவரும் செயற்படுவது எல்லோருக்கும் பாதுகாப்பானதாக இருக்கும்.

# வவுனியா பாடசாலையொன்றில் மூன்று கணனிகள் திருட்டு

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் நாகராஜா வித்தியாலயத்தில் நேற்று முன்தினமிரவு கணனி அறை உடைக்கப்பட்டு மூன்று கணனிகள் திருடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.வரதராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பின்தங்கிய கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட பாடசாலையாக திகழும் இப் பாடசாலையில் மாணவர்களது கணனி அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கணனிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்றுக் காலை பாடசாலை வளாகத்தினுள் வந்து பார்த்த போது கணனி அறை உடைக்கப்பட்டு காணப்பட்டதுடன் மேற்படி கணனி அறையினுள் இருந்த மூன்று கணனிகள் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் வலயக் கல்வி அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந–9,266)

# மாணவர் மீதான தாக்குதல் முறையிடப்படவில்லை

## யாழ். ம.உ.ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை எந்தவித முறைப்பாடுகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் தினம் தீபமேற்றி அனுஷ்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து மறுநாள் மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட கண்டனப் பேரணியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தடியடித் தாக்குதல் மேற்கொண்டனர். இதன்போது பல மாணவர்கள் காயங்களுக்குள்ளானதோடு மாணவர்கள் சிலரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவா? எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ–6)

# காணாமல்போனோர் குறித்து இதுவரை 80 முறைப்பாடுகள்

## ம. உ. குழுவின் இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதிக் கட்டப் போரின்போது காணாமல்போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்கள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து வருவதாகவும் 80 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தினால் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவை கடந்த இரண்டு மாதங்களாக நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவையின் போது பல முறைப்பாடுகளை மக்கள் மேற்கொண்டு வருவதோடு தமக்குத் தேவையான சட்ட உதவிகளையும் பெற்றுச் செல்கின்றனர்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது இதுவரை 80 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் போரின்போது காணாமற்போனவர்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ளன என்றார். (அ–6)

# வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துடன் இணைந்து யு.என்.எச்.சி.ஆர், டி.ஆர்.சி. ஆகியோர் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணியை இன்று செவ்வாய்க்கிழமை நடத்தவுள்ளனர்.

இப்பேரணியானது காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு கடற்கரை வீதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தின் முன்பாக நிறைவடையவுள்ளது.

இப்பேரணி பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், முல்லை தீவு வர்த்தக சங்கத்தினர், பொலிசார் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். [illegible]

# திருமலையில் இந்திய மீனவர்கள் 37 பேர் கைது

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகக்கூறப்படும் இந்திய மீனவர்கள் 37 பேரை கடற்படையினர் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

திருகோணமலை, புல்மோட்டை கடற்பகுதிக்கு அப்பாலேயே மேற்படி மீனவர்கள் 5 ரோலர் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இவர்கள் திருகோணமலை கடற்படை முகாமில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ–9)

# மருத்துவ முகாமும் கருத்தரங்கும்

யாழ். லயன்ஸ் கழக ஏற்பாட்டில் அரியாலை கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களாகிய பூம்புகார், நாவலர் மணியந்தோட்டம் முன்பள்ளி மாணவர்களுக்கான தற்சுகாதாரம் மற்றும் பற்சுகாதாரத்தை விருத்தி செய்தல் தொடர்பான மருத்துவ முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை பிலாறெல்பியா மிஷனரி சபை, கண்டி வீதி, அரியாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் அரிமாக்கழக உறுப்பினர்களையும் பிரதேச மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.லயன்ஸ் கழக தலைவர் கு.ஜெயந்தன் கேட்டுள்ளார். (அ)

# தீக்காயங்களுக்குள்ளான வயோதிபப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் அரசடி வீதி திருநெல்வேலியில் உள்ள வீடொன்றில் இருந்த வயோதிபப் பெண்ணொருவர் வீட்டில் ஏற்றப்பட்டிருந்த விளக்கில் சேலை எரியுண்டதனால் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ–6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையான மகிழ்ச்சி



உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் அதெய்வங்கள் என்றால் மிகையில்லை.

அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

தன்னலத்தை ஒழிப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்கமுடியாது.

கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்யமுடியாமல் போய்விடும். ஆனால் அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.

மன்னிக்கக்கூடியதும் சமநோக்குடையதும் நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக தாக்குதலை இந்தியா கண்டிக்க வேண்டும்

## மத்திய அரசை கோருகிறார் கருணாநிதி

இலங்கையின் யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் தினத்தையொட்டி கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சென்னையில் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், யாழ்ப்பாணத்தில் பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியமைக்கு தமிழகத்திலே உள்ள பல்வேறு கட்சியினர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் கார்த்திகை தீபத்தையொட்டி இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உள்ள வீடுகளில் ஏற்றி வைத்த விளக்குகளையும் கூட படையினர் அடித்து நொறுக்கி ஈழத் தமிழர்கள் மனதை காயப்படுத்தியிருக்கிறார்கள்.

மாவீரர் தினத்தையொட்டி கடந்த வாரம் 27 ஆம் திகதியன்று வீர வணக்கம் செய்து கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை படையினர் தாக்கியிருக்கிறார்கள். இது குறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சஞ்சீவ பண்டார பேட்டி அளிக்கையில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டது மற்றும் 4 மாணவர்களின் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்தி வருகின்றனர் என்றார்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றும் அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். யாழ்.பல்கலைக்கழகத்தில் நடந்த தாக்குதலைக் கண்டித்து பல்வேறு பல்கலைக் கழங்களில் கால வரையறையற்ற வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்ச்சியை அமெரிக்கத் தூதரகம் வன்மையாக கண்டித்துள்ளது. இதுபற்றி இந்தியத் தூதரகமும் விசாரித்து இந்திய அரசிடம் தெரிவித்து அரசின் சார்பில் வன்மையாக கண்டனத்தை இலங்கை அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக கருணாநிதி கூறியுள்ளார். (அ-9)

## நல்லொழுக்க தின நிகழ்வு

(கரவெட்டி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி (விகடகவி) மு.திருநாவுக்கரசு, கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-24)

# சன்சீ கப்பலில் சென்றவர்கள்

## சிறையில் வாடும் அவலம்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு கப்பலில் கனடாவுக்குச் சென்ற 492 கைதிகளில் சிலர் சிறைக் கைதிகளாக இருப்பதாகவும் பலரும் சிறைக் கைதிகள் போலவே நடத்தப்பட்டதாகவும் இங்கிலாந்துப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

கனடாவில் ஒரு நல்வாழ்க்கை கிடைக்கும் என சரக்குகளை ஏற்றும் சன்சீ என்ற கப்பலில் பயணித்து கனடா வந்த 492 அகதிகளும் அரசியல் இலாபங்களுக்காகவும் தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் கனடாவால் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் தாராள மனப்பான்மையை பாவித்து சர்வதேச சட்டங்களையெல்லாம் மீறி இந்த அகதிகள் வந்துள்ள விவகாரத்தையடுத்து கனேடிய அதிகாரிகள் எங்களது சட்டதிட்டங்களையெல்லாம் இறுக்கமாக மாற்றுவார்கள் என கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக் ரோவ்ஸ் தெரிவித்ததை மேற்படி கூற்றுக்கு ஆதாரமாக மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

கனேடிய அரசு பிரிட்டிஷ், கொலம்பியா மாகாண சிறைகளில் சிறுவர்கள், பெண்கள் ஆண்கள் என அனைவரையும் மாதக் கணக்கில் அடைத்து வைத்திருந்ததாகவும் பலர் தற்போதும் அச்சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கபட்டுள்ளது. (எ-11)

# தெரிவுக்குழு விசாரணைகளை இடைநிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான பாராளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளை இடைநிறுத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

பிரதம நீதியரசருக்கு எதிரான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்து விசாரணைகளை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற விசாரணைகளை ஒத்தி வைக்குமாறு உச்ச நீதிமன்றம் கோரியிருந்ததுடன் பாராளுமன்றின் மீது வேறு நிறுவனங்கள் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது எனவும் விசாரணைகளை ஒத்தி வைக்க முடியாது எனவும் சபாநாயகர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஓர் பின்னணியில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (அ-9)

# பரிசு கிடைத்துள்ளதாக தெரிவித்து மோசடியில் ஈடுபடும் கும்பல்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் பரவலாக நிலையான தொலைபேசிகளுக்கு அழைப்புக்களை மேற்கொண்டு பரிசு கிடைத்துள்ளதாகவும் வெளிநாட்டு வாய்ப்பு தமது நிறுவனத்தின் ஊடாக கிடைத்துள்ளதாகவும் தெரிவித்து வங்கியில் பணம் வைப்பிலிடுமாறு கூறும் மோசடிக்காரர்களால் பலரும் ஏமாற்றமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறிப்பிட்ட சிலரின் நிலையான தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பினை மேற்கொள்ளும் சிலர் பல தேசிய கம்பனிகளின் வாடிக்கையாளர் சேவைப்பிரிவில் இருந்து உரையாடுவதாகவும் தாம் தொடர்பினை மேற்கொண்ட தொலைபேசி நிறுவனத்துடன் இணைந்து நடத்திய போட்டியொன்றில் ப்ரிசு கிடைத்துள்ளதாகவும் வெளிநாடுகளுக்கு போவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்து அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு முதற்கட்ட பணம் வைப்பிலிட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

இதனை நம்பிய சிலர் தமது தொலைபேசி சேவையாளர்கள் போட்டியை நடத்தியிருக்கலாம் என்ற நம்பிக்கையில் வங்கியில் பணத்தை வைப்பிலிட்ட நிலையும் சிலர் தமது தொலைபேசி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தெளிவுபெற்ற நிலையும் இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் வவுனியா ரெலிக்கொம் தொலைபேசி நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இவ்விடயமாக தம்மிடம் பலர் தொடர்பு கொண்டதாகவும் எனினும் தமது நிறுவனத்திற்கும் இவ்வாறான போட்டிகளுக்கும் சம்பந்தமில்லை எனவும் தெரிவித்ததுடன் வாடிக்கையாளர்களை அவதானத்துடன் செயற்படுமாறும் கோரியுள்ளனர். (அ-9-266)

# குளிரான காலநிலை சில தினங்களுக்கு நீடிக்கும்

இந்தியாவிலிருந்து உலர்ந்து குளிர் காற்று வீசுவதன் காரணமாக இலங்கையில் வெப்பநிலை குறைவடைந்துள்ளது. ஆகையால் வெப்ப வலயங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் குளிரான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற குளிரான் காலநிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வீசுகின்ற குளிர் காற்றும் நாட்டின் வான் பரப்பில் முகில்கள் குறைவாக இருந்தமையுமே வெப்பநிலை குறைவுக்கு காரணங்களாக அமைந்துள்ளன என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் நுவரெலியா மாவட்டத்தில் ஆகக்குறைந்த வெப்பநிலையாக 7.9 பாகை பதிவாகியுள்ளது. அத்துடன் கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 26 பாகை வெப்பநிலையும் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவின் பல பகுதிகளில் வெப்பநிலை குறைவடைந்துள்ளதாக இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதுடில்லியில் ஆகக் குறைந்த வெப்பநிலையாக 7 பாகை பதிவாகியுள்ளது. தமிழ் நாட்டில் 21 பாகை வெப்பநிலை பதிவாகியுள்ளதாக இந்திய வளிமண்டலவியல் திணைக்கள இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# யாழ். மாவட்டத்தில் பரவலாக பாதீனியம்

## கட்டுப்படுத்த கோரிக்கை

(சிவநகர்)

யாழ்.மாவட்டத்தில் பரவலாக பாதீனியம் செடி காணப்படுகிறது. இச்செடியினால் விவசாய நிலங்களும் விளைநிலங்களும் அதிகம் பாதிக்கப்படும் என விவசாய திணைக்களம் எச்சரித்துள்ளது.

இச்செடியை காணிகளில் காணுமிடத்து தண்டனை வழங்கப்படும் என அரசினால் அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் கைதடியிலிருந்து மருதனார்மடம் செல்லும் வீதியோரங்கள், புத்தூர் சுன்னாகம் செல்லும் வீதியோரங்கள், மைதானங்கள், அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள பிரதேசம் மற்றும் சில வீட்டு வளவுகளிலும் இச்செடி பரவலாக காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இச்செடியை மக்கள் இனங்காண முடியாமையினாலேயே இவ்வாறு இவை பரவி காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே இச்செடியை அகற்ற உரிய தரப்பினர் அதற்கான ஏற்பாடுகளை செய்து மேலும் அச்செடி பரவுவதைத் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டாம் என சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-3-254)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1950.12.30

மறைவு: 2012.11.04

எங்கள் குடும்பத் தலைவியாகவும்
தலைவனாகவும் இருந்து
கண்ணை இமை காப்பது போல
எமைக் காத்து வளர்த்து
உயர்வளித்து
இறைவனடி சேர்ந்த
எங்கள் இதயத் தெய்வம்
அமரர் திருமதி சந்திராதேவியின்
தூய நல் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்டி அரசன் M.A. மகாலிங்கத்தின் மகள்
அமரர் திருமதி
சந்திராதேவி சதானந்தம் (சி/1665)

திரு.திருமதி திலீபன் யாழினி
திரு.திருமதி ஹேமகுமார் தர்சினி
(பாமினி)

கோவிற் கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆஸியை வீழ்த்தி தொடரை சுவீகரித்தது தென்னாபிரிக்கா


(பேர்த்)

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3-வது போட்டியில் தென்னாபிரிக்க அணி 309 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி டு பிளஸியின் 78 ஓட்டங்களின் துணையோடு 225 ஓட்டங்களைப் பெற்றது.





பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக நேதன் லயன் 3 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஸ்ரார்க், மிற்சல் ஜோன்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 163 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக மத்யூ வேட் தனித்து நின்று போராடி 68 ஓட்டங்களை பெற்ற அதேவேளை, பந்துவீச்சில் டேல் ஸ்ரெய்ன் 4 விக்கெட்டுக்களையும், ரொபின் பீற்றர்சன் 3 விக்கெட்டுக்களையும், வேர்ணன் பிலாண்டர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது 2-வது இன்னிங்ஸில் ஆடிய தென்னாபிரிக்க அணி ஹசிம் அம்லாவின் 196 ஓட்டங்கள், ஏ.பி.டி வில்லியர்ஸின் 169 ஓட்டங்கள், கிரேம் ஸ்மித்தின் 84 ஓட்டங்களின் துணையோடு 569 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணியின் மிற்சல் ஸ்ரார்க் 6 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஜோன்சன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

632 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 322 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 309 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், எட் கோவன் 53 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன், ரொபின் பீற்றர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வேர்ணன் பிலாண்டர், மோர்ணி மோர்க்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயனாக ஹசிம் அம்லாவும், போட்டித் தொடரின் நாயகனாக மைக்கல் கிளார்க்கும் தெரிவாகினர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி சர்வதேச டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.



விடைபெற்றார் பொன்டிங்

# சச்சின் என் கதாநாயகன் இந்திய வீரர் யுவராஜ் சிங்

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் தற்போது மோசமான ஆட்டம் காரணமாக கடும் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறார். அவரது ஓய்வு குறித்து தற்போது விவாதம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் சச்சின்தான் எனது கதாநாயகன் என்று யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

சச்சின் பற்றிய 'தி பீக்' என்ற புத்தகம் வெளியிட்டு விழா கொல்கத்தாவில் நடந்தது.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டு யுவராஜ் சிங் கூறுகையில், சிறு வயதில் இருந்தே சச்சின் ஆட்டம் எனக்குப் பிடிக்கும். தற்போதுவரை அது தொடர்கிறது. அவர்தான் எனது நாயகன். அத்தோடு தேசத்தின் நாயகனும் அவர்தான் என்றார்.

சச்சினுடன் இணைந்து ஆடுவது சிறு வயதில் கனவாக இருந்தது என்றும் அந்தக் கனவு நனவாகி அவருடன் இணைந்து பயணத்தை தொடர்வது அற்புதமானது எனவும் கூறியுள்ளார்.





அகவை 80 இல்
அகமகிழ்ந்த
வாழ்த்துக்கள்

இன்று அகவை 80 ஐ நிறைவு செய்யும்
எங்கள் அன்புக்குரிய
உயர்திரு த. கனகசபை
(ஓய்வு பெற்ற பிரதம காசாளர், யா. மா. ச.)

ஊருக்கு உதவுவதே உன்னதப் பணி
எல்லாப் புகழும் இறைவனுக்கு - என்பதே நிம்மதி
இதுவே தன் தாரக மந்திரமாய்க் கொண்ட
எங்கள் மதிப்புயர் கனகசபை ஐயா!
அகவை எண்பதில் முத்துவிழாக் கண்டார் !
உத்தமனார் இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அன்பு உள்ளங்கள்


# குத்துச்சண்டையில் கலக்கும் பிளின்ரொப்



34 வயதான பிளின்ரொப் மோதிய முதல் குத்துச்சண்டைப் போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஹெவி வெயிட் பிரிவுக்கான இந்தப் போட்டியில் அவர் அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் டாசனை எதிர்கொண்டார்.

4 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் அவர் 2-வது சுற்றிலேயே 'நொக் அவுட்' செய்தார். பிளின்ரொப் 39:38 என்ற கணக்கில் தனது முதல் போட்டியிலேயே வெற்றியைப் பதிவு செய்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அன்ரூ பிளின்ரொப் 2009-ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார்.

சகலதுறை வீரரான இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஓவல் மைதானத்தில் 2009-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த போட்டியில் ஆடியதே கடைசி டெஸ்ட் ஆகும்.

ஓய்வுபெற்ற வீரர்கள் பெரும்பாலும் பயிற்சியாளர்கள், தொலைக்காட்சி வர்ணணையாளர்கள் அல்லது கிரிக்கெட் சம்பந்தமான நிர்வாகங்களில் ஈடுபடுவார்கள்.

ஆனால் பிளின்ரொப் தொழில்ரீதியான குத்துச்சண்டை வீரராக முற்றிலும் மாறினார்.

இது குறித்து பிளின்ரொப் கூறுகையில், முதல் போட்டியிலேயே வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. ரசிகர்களின் ஆதரவால் தான் என்னால் வெற்றி பெற முடிந்தது என்றார்.

பிளின்ரொப் 79 டெஸ்டில் விளையாடி 3,845 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன் 226 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் 141 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 3394 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன் 169 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். அத்துடன் ஐ.பி.எல்லில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக போட்டிகளிலும் பங்குபற்றியும் இருந்தார்.

# இலங்கை தயாராகவில்லை

அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 இருபது -20 சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற்றவுள்ளது.

இந்நிலையில் அத்தொடருக்காக இலங்கை அணி தயாராக காணப்படவில்லையென இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நியூசிலாந்து அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தினால் அந்தத் தொடர் அவுஸ்திரேலியத் தொடருக்கு சிறப்பான பயிற்சியாக அமையும் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இலங்கை அணி சிறப்பாக செயற்பட்டு வேகப் பந்து வீச்சிற்கு எதிரான தனது திறமையை வெளிப்படுத்தவில்லை.

எனவே வேகப்பந்துவீச்சுக்கெதிரான இலங்கையின் துடுப்பாட்டம் குறித்த சந்தேககங்கள் நிலவுகின்றது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக சூழலை இராணுவம்...

மாணவர்களை நள்ளிரவு வேளையில் கைது செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவது மேலும் நிலமையை மோசமடையச் செய்யும் என்பதனை சம்பந்தப்பட்ட தரப்பி னருக்கு பல்கலைக்கழக நிர்வாகம் வலியுறுத்த வேண்டும் எனத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திற்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக சூழலை இயல்பு நிலைக்கு மீளக் கொண்டு வரவேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங் கத்தினால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்து வழங்கப்பட்ட மகஜரிலேயே இவ்விடயத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் வழங்கிய மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி இரவு வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிக்குள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நிர்வாகத்தின் அனுமதியின்றி அத்து மீறி நுழைந்து மரணபயத்தை ஏற்படுத்தும் வகையிலான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி யிருந்தனர்.

இதனைக் கண்டித்து மறுநாள் 28ஆம் திகதி எமது பல்கலைக்கழக மாணவர்கள் அமைதிப் போராட்டம் நடத்தியமையும் அப் போராட் டத்தை ஆயுதம் தரித்த இராணுவத்தினரும் பொலிஸாரும் வன்முறையை பிரயோகித்து நசுக்கியமையும் தாங்கள் அறிந்ததே.

மேலும் அதனைத் தொடர்ந்து சில பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு வவுனியாவில் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டுள்ளமையும் இன்னும் பல மாணவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே.

இச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டதாக இராணுவத்தினராலும் பொலிஸாராலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்றாடல் எங் கனும் வீதித்தடைகள் அமைத்தும் சோதனைச் சாவடிகள் அமைத்தும் பல்கல்லைக்கழக சூழல் ஒரு இராணுவச் சூழலாக மாற்றப்பட்டுள்ள மையை தாங்கள் அவதானித்திருப்பீர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல்கலைக் கழக சமூகத்தவர்களை சோதனை என்ற போர்வையில் அச்சுறுத்தி பதிவு செய்தல் நடைமுறைகளையும் மேற்கொண்டு பல் கலைக்கழக சூழலை பயப்பீதியில் வைத் திருக்க முனைந்து வருவதனையும் தாங்கள் அவதானித்திருப்பீர்கள்.

இந்த நிலையில், இன்று (நேற்று) யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேடப் பொதுக் கூட்டம் ஒன்றில் ஏகமன தாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் தற்போது நிலவும் அசா தாரண சூழலை தணிப்பது தொடர்பில் பின் வரும் முன்வைப்புக்களை பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

* கைது செய்யப்பட்ட நான்கு மாணவர் களும் விடுதலை செய்யப்படும் வரை கற்றல், கற் பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவது சாத்தியமற்றது.

* கைது செய்யப்பட்ட மாணவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் மேலும் கைதுகள் இடம் பெறாது என்றும் உறுதியளிக்கப்படவேண்டும்.

* பல்கலைக்கழக சூழலில் இராணுவ மய மாக்கலின் அடையாளங்களாக அமைக்கப் பட்டுள்ள வீதித்தடைகள், சோதனைச் சாவடி கள் மற்றும் இராணுவம், பொலிஸாரின் பிரசன்னம், புலனாய்வுப் பிரிவினரின் தலையீடு நீக்கப்படாவிடில் இயல்பான சூழலில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வது சாத்தியமற்றது என் பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகம் வலியுறுத்த வேண்டும்.

* மேற்கூறப்பட்ட அனைத்து நடவடிக்கை களும் பல்கலைக்கழக சமூகத்தினை ஒரு பய பிராந்திக்குள் உட்படுத்தி அடக்கி வைத்திருக்க முயலும் ஒரு செயலாகும் என்பதனையும் சம் பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

மேற்படி விடயங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் எமது பல்கலைக்கழகத்தில் இயல்பு நிலை மீளத்திரும்புவதற்கு உடனடியாக ஆவண செய்யுமாறு யாழ்ப்பாணப் பல் கலைக்கழக ஆசிரியர் சங்கம் தங்களை வேண்டிக் கொள்கின்றது என அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ந-11)

# கண்டன ஆர்ப்பாட்டத்...

படும் முயற்சிகளையும் கண்டித்து இன்று காலை 11 மணிக்கு யாழ் பேருந்து நிலையம் முன்றலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணைந்து நடத்தவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி, யாழ் வணிகர் கழகம், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி, யாழ் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பிரதேசசபை, நகரசபை உறுப்பி னர்கள், மனித உரிமைச் செயற்பாட்டா ளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் இது சாத்வீக ஜனநாயக வழியிலான போராட்டங்களை வன்முறையி னால் அடக்கி ஒடுக்க முனையும் சக்தி களுக்கு எதிரான போராட்டமாகையால் அதில் அனைத்து சமூகத்தினரையும் பங்கேற்று போராட்டத்தை வலுப்படுத்திக் கொள்ளு மாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (ந-6-4)

# தமிழனின் சிதைவுக...

தமிழர்களை அழிக்க நினைக்கும் நடவடிக்கை களை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அதில் கூறியிருந்தார்.

இப்போது ஸ்ராலின், டி. ஆர். பாலு மூலம் ஐ.நா சபைக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியதை அமைச்சராக இருந்த ஒருவர் விமர்சனம் செய்துள்ளார். இதுதான் விதண்டா வாதம். தமிழன் உருப்படாமல் போனதற்கு இதுதான் காரணம்.

பிரபாகரன் ஆயுதம் ஏந்தி போராடிய போதே 'ஈழத் தமிழகம்' அமைந்திருக்க வேண்டும். ஆனால் தமிழர்களிடையே ஒற்றுமையில்லாத காரணத்தால் தான் 'ஈழத் தமிழகம்' கிடைக்கவில்லை என்றார் அவர். (ந-11)

# பிரபாகரன் கொல்ல ...

பெற்றுக்கெண்டதைப் போன்று தமிழ் மக்களுக்கும் அவ்வாறானதொரு அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெல்சன் மண்டேலா, யசீர் அரபாத் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோர் கரந்தடிப் படைத்தலைவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். பிரபாகரன் கொல்லப்பட்டாரென்பது விஞ்ஞான ரீதியல் இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

# சிறிதரன் எம்.பியின் ...

பேரிலேயே அலுவலக பாதுகாப்பு பொலிஸார் விலக்கப்பட்டதாக கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறிதரனிடம் தெரிவித்தார்.

சிறிதரனின் அலுவலக பாதுகாப்பில் 2 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# பல்கலைத் தாக்குதலை கண்டித்து ...

அத்துமீறி நுழைந்ததைக் கண்டித்து மறுநாள் அதாவது நவம்பர் 28ஆம் திகதி பல்கலைக் கழக மாணவர்களினால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டதோடு வீதியில் பேரணி யாக செல்லவும் முற்பட்டனர். இதன் போது கலகம் அடக்கும் பொலிஸாரும் இராணு வத்தினரும் மூர்க்கத்தனமாக மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இதில் பல மாணவர்கள் காயத்துக்குள் ளாகியிருந்தனர் அத்தோடு மாணவர்களும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் மாண வர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளதைக் கண்டித்தும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இன்றைய கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல தரப்பினரும் பங்கு கொள்ளவுள்ளனர்.

கண்டன ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ள தாக ஏற்கெனவே தகவல் வெளியாகியுள்ள தையடுத்து நகர்ப்பகுதியில் நேற்றைய தினம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க கூடியதாகயிருந்தது.

இராணுவத்தினர் துவிச்சக்கர வண்டி களில் வழமைக்கு மாறாக ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்ததோடு இராணுவ வாகனங்களின் பிரசன்னமும் அதிகரித்துக் காணப்பட்டது.

இதுதவிர பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை கண்டன ஆர்ப்பாட்டம் திட்ட மிட்டபடி இன்று நடைபெறும் என ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்.

தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த தமது உறவுகளுக்கு கடந்த 27 ஆம் திகதி ஈகச் சுடரேற்றி நினைவு கூர்ந்தார்கள் என்று கூறி யாழ். பல்கலைக்கழக மாணவிகளதும் மாணவர்களதும் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் துப்பாக்கிகளை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததுடன். அவர் களைத் தாக்கியும் இருந்தனர். இச்சம்பவங் களைக் கண்டித்து மறுநாள் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர். அமைதியாகவும் ஜனநா யக ரீதியாகவும் மாணவ, மாணவிகளால் மேற்கொள்ளப்பட்ட இப்போராட்டமானது அரச பயங்கரவாதத்தினால் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் திருப்தி கண்டுவிடாத அரச பயங்கரவாதம் பல்கலைக்கழக மாணவர் களில் நான்குபேரை கைது செய்து பயங்கர வாதத் தடுப்புப் பிரிவின் மூலம் விசாரித்தும் வருகின்றது.

தமிழ்த் தேசிய போராட்டத்தில் யாழ். பல் கலைக்கழகத்தின் வகிபாகம் முக்கியமான தும் பிரித்தறிய முடியாததுமாகும்.

யாழ் பல்கலைக்கழக சமூகத்தினை அடக்கி ஒடுக்க அரச இயந்திரம் முயற்சிப்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவர்கள் செய்துவரும் பங்களிப்பை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கையாகவே அரச இயந்திரம் கற்பனை காண்கின்றது.

இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அணிதிர ளுகின்றபோதுதான் பல்கலைக்கழக மாண வர்களது பாதுகாப்பை மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழ் மக்களதும் பாதுகாப்பையும் தமிழ்த் தேசத்தின் இருப்பையும் உறுதிப் படுத்த முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4-6)

# மரண அறிவித்தல்



## சண்முகம் இராசரெட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கு.கைதடியைவசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசரெட்ணம் (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவப்பி ஆகியோரின் அன்பு மருமகனும் அன்னப்பிள்ளையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராசையா மற்றும் இராச துரை, பவளம், நாகேஸ்வரி (கொழும்பு) ராஜேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் செல்லன், பூரணம் (டென்மார்க்) அர்ச்சுணன் (பிரான்ஸ்) தங்கம்மா (டென்மார்க்) வசந்தாதேவி ஆகியோரின் பாசமுள்ள மைத்துனரும் சரஸ்வதி. இராசையா, ராசம்மா, செல்லத்துரை தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரஸ்வதி வெள்ளையன், பாமாதேவி, அப்புத்துரை, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லோறன்ஸ் (சுபா பான்சி உரிமையாளர், சாவகச்சேரி) சுபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சன்றோயஸ் குயின்ரஸ் (சதீஸ்) SDC Technical Supervisior இன் அன்பு மாமனாரும் போல் றொபின்ஸனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் (05.12.2012) நாளை புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாவற்குழி அற்புத அன்னை தேவாலயத்தில் 10 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கைதடி உரியான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், வாடிக்கையாளர்கள், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ. லோறன்ஸ் (மகன்)
சுபா பா்ன்சி உரிமையாளர்

கைதடி கிழக்கு.
கைதடி. தொலைபேசி : 0778680358 (1090)

சிவ சித்தர் குருகுலம்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு :773 212 711

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி கொமஷியல் வங்கி அருகாமை
புதிய கல்வி ஆண்டு 2013
தரம் 5, 9, 10, O/L ஆகிய வகுப்புகள்
ஆரம்பம் 2012-12-09 மு.ப. 9.00 (ஞாயிறு)
Note :
12ம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெறும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது (C-1663)
தொடர்பு : 077 5133990
மிகவிரைவில் A/L Day Class ஆரம்பம்

பிரத்தியேக வகுப்புகள்
கணிதம்
ஆங்கிலம்
K. யோகேந்திரன்
பிரபல ஆசிரியர்
வகுப்பு : 9, 10, O/L
கிறிஸ்ரல் சென்ரர் - நெல்லியடி 2012-12-09 மு.ப 9.00
CAN வைத்தியசாலை அருகில் றொட்டியாலடி, சுன்னாகம் 2012-12-03 பி.ப 3.00
நெசவுசாலை வீதி - தெல்லிப்பளை 2012-12-09 பி.ப 4.00
அம்மன் கோவிலடி கல்வியங்காடு 2012-12-05 பி.ப 5.00
(C-1663)

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
City &Guilds இன் கற்கை நெறிகள்
UK Border Agency ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட
City& Guilds
A1-Exam
(திருமணம் செய்து UK செல்வதற்கான)
B1-Exam
(Student Visa மூலம் UK செல்வதற்கான)
IELTS
• Unique Test Tips
• Latest course Material
IELTS பரீட்சைக்கான பதிவுகள் DMI இல் நடைபெறுகின்றன. யாழ்மண்ணிலேயே பரீட்சைக்கு தோற்றலாம்.
veta Spoken English
தரமானதும் முறையானதுமான பயிற்சிகள்
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, [illegible] Tel.: 021-2262470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி.(HNB அருகில்) Tel.:021-2270243 |
| சுன்னாகம் | K [illegible] |


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org